அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

விவேக போதினி

2505

ஓர் சிறந்த மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி. 1

1908-ம்வருஷ ஜூலைமீ—**1909**-ம்வருஷ ஜூன்மீ

1908-09

சென்னை

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரவர்களால்

"கார்டியன் அச்சுக்கூடத்தில்" பதிப்பிக்கப்பட்டது

Rights Reserved]

விலை ரூபா 4.

அட்டவணை

மதவிஷயங்கள்.

மதவிஷயங்களின் ஸ்வரூபம் 4
மதவிஷய ஆராய்ச்சியின் அவசியம் ... 33
ஹிந்துமதத்தின் விரிவு 65
பக்திமார்க்கம் 97
ஸநாதன தர்மம் 129
ஸநாதன தருமத்தின் சிறப்பு 161
ஸநாதன தருமத்தைப்பற்றிய லௌகிக
வைதீக அபிப்பிராயங்கள் 193
ஸநாதன தருமத்தின் கொள்கைகள் ... 225
வேதங்களின் ஸ்வரூபம் 257
வேதங்கள் அநாதி 289
வேதங்கள் அனந்தம் அபௌருஷேயம் ... 321
வேதங்கள் பிரமாண்யம் 354

பெரியோர் சரிதை.—

ஈச்வர சந்திர வித்தியாஸாகரர் 68
ராஜாராம்மோஹனராய் 102
ஜார்ஜ் அக்லோபோப் 132
ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் ஐயர்.
மனமாறிய சருக்கம் 165
உபதேசம்பெற்ற சருக்கம் 195
பிரபுத்த பாரதச்சருக்கம் 228
வாழ்க்கைச் சருக்கம் 278
தேகம் நழுவிய சருக்கம் 293
ராய் பகதூர் பி. அனந்தாசார்லு ... 360

இயற்கை அற்புதங்கள்.—

மழைக்கால்கள் 106
எரிமலைகளின் இயற்கை 134
எரிமலைகளின் காரணகாரியங்கள் ... 170
பூகம்பங்கள் 204
வெந்நீர் ஊற்றுகள் 237
கானல் நீரும் அதன் ரூபாந்திரங்களும் ... 271
வால்நக்ஷத்திரங்கள் 302
எரிநக்ஷத்திரங்களும் பொரிநக்ஷத்திரங்
களும் 337
பனிக்கட்டியும் அதன் ரூபாந்திரங்களும் ... 366

நமது நோன்புகள்.—

வருஷப்பிறப்பு 325

சுகாதாரம்.—

சுகாதாரவிளக்கம்.
நிலம் 14
நீர் 49
உத்விருஷ்டங்களை அடக்குதல் ... 75
வாயு 114
வாஸஸ்தலம் 150
உணவின் நிலைமை 182
உணவின் உபயோகம் 214
தேகவியாயாமம் 344
சுகாதார விதிகள்.
வீடுகளைப் பற்றியவை ... ... 1[illegible]
தேகாரோக்யம் 138
நாம் குடிக்கும் தண்ணீர் 243
ஸ்நானம் முதலியவை 370

வியவசாயம்.—

உழவு நூல்.
சரித்திரம் 11,46
பழைய வியவசாயக்கருவிகள் 47
1837 வரையிலுள்ள வியவசாயக்கருவிகள் 83
இராஜதானியின் அமைப்பும் மழையின்
அளவும் 148
எருவினுயர்வு 112
எருவின் வகுப்பு 184
விதைபொறுக்கல் விதையைக்காப்பாற்றல் 212
பருவக்காற்றுமழை 342
சென்னை இலாகா விவசாய பண்ணைநெல்
சாகுபடி 373

போத.—

புளியமரம் 80
இலுப்பைமரம் 180
புன்னைமரம் 245

வியாஸங்கள்.—

ஸ்வகீயம் 1
பின்நோக்கு ... ... 35[illegible]

தமிழ்வசன நடையின் இலக்கணம் ... 6
பொருளாசை 9
தமிழ்த்தொகை நூல் 36
உலகவாழ்க்கை 41
விடாமுயற்சி 44
ஊக்கம் 71
நாடகத்தமிழ் 100
சமயபுரத்தின் மாகாத்மியம் 108
பொறுமை 140
...ப்பிலக்...ணம் 200
கம்முருபியின் சட்டங்கள் 208
மஹாமகதீர்த்த விசேஷம் 234
கல்விச்சிறப்பு 236
இயற்கையும் மனவுறுதியும் 240
மேன்மை அடையும் வழி 262
குறைந்த விளைவும் அதிக அகவிலையும் ... 266
ஆப்பிரிகாவில் விவாக விமரிசைகள் ... 268
பார்வி ஜாதியார் வரலாறு 275
காலம் 297
...கவல் இனிமை 299
. 256 329
...க விமர்சை 332
மக...தமிழ்...ல் முடிந்த நெடுங்கணக்கிற்காக ஓர்
...ண்டுகோள் 363
விவசா...யமும் தமிழ்ப்புலவர்களும் ... 378

மொழிபெ...யர்ப்புகள்.—

...கல்வி 39
பெண்...க்கருத்தமைந்த தமிழ்ப்பாத்தொகை 251
ஆங்கில...
இந்து...லேகா(ஓர் மலையாள நாவல்) 18 54 96 a 126 155 188 218
குமார...ஸம்பவம்(ஓர் வடமொழி காவ்யம்) 16 52 81 110 146 178 210 247, 308, 349 376
...சீகரம் (ஓர் ஆங்கில நாடகம்) 21 56 86 117 152 186 216 249, 306, 346,
நீலி...த் (ஓர் ஆங்கிலநாடகம்) ... 142 174
மங்கே...ளி (ஓர் ஸம்ஸ்கிருத நாடகம்) ... 310

சிறுவ...ர்களுக்கான பக்கங்கள்.

...ஆராதனையின் பயன்— 23
...ர்வம் கேடு விளைவிக்கும்—யுக்தியே
...—சுட்டப்பழம் வேண்டுமோ சுடாதபழம்
...ண்டுமோ—யுக்தியே சக்தி—கர்வம் கே
...ளைவிக்கும்—விதிதிகள் 24

ஒய்வுவேளை 384
பேராசை பெருநஷ்டம் :—ஸ்ருஷ்டியின் ஸ்வரூபம்— துக்கரூபமான சுகம் 384 a
கைம்மாறு கருதும் பக்தியைப் பழித்தல்—
கடன் படுவதினல் வரும்கெடுதி— ... 25
பரோபகார ஸ்வரூபம். 26
உலகத்தைச் சுற்றிவருதல்—கடவுள் ஸர்வாந்தர்யாமி—கடவுளின் மகிமை— ... 58
மனம் மாற ஜகம்மாறும்—மனதை ஜயித்தவனே வீரன் 59
கைம்மாறு கருதாபக்தி 60
தீவிர மோக்ஷாபேக்ஷை—பெரியோர் தரிசனவிசேஷம் 90
ஸ்வதர்ம அனுஷ்டானத்தின் சிறப்பு ... 91
மானஸ பூஜையின்சிறப்பு 92
போலிபக்தி 120
துஷ்டரைக்கண்டால் தூரவிலகு ... 121
புருஷார்த்தங்கள் 157
கடவுள் தியானம்—அச்சாணி அன்னதோர் சொல் 158
உண்மையும் தோற்றமும்—திதிக்ஷை அல்லது ஸஹித்தல் 190
நல்லவேஷத்தால் விளையும் நன்மைகள் கொள்வதிற் கொடுத்தலே நன்று ... 224 (a)
பூனையும் நரியும்—கோபம் சண்டாளம்—இராமாயணஸாரம் 253
உண்மை 287
எல்லாம் ஈசன் செயல்—தமிழ்ச்சிறப்பு ... 314
கடவுள் தியானம்—உள்ளதை உள்ளபடி சொல் ... 315
தானம் செய்யும் விதம் 351
ஒய்வு வேளை 384
பேராசை பெருநஷ்டம்--ஸ்ருஷ்டியின் ஸ்வரூபம்—துக்கரூபமான சுகம் ... 384 a

ஸ்திரிகளுக்கான பக்கங்கள்:—

திருவள்ளுவர் மனைவி—அனுஸூயைகதை 27
கிரிஸல்டா 28
தலனி பேகம் 61
சாவித்திரி அல்லது கற்பின்வலிமை ... 92
சிலபழமொழிகள் ... 122 159 191
சுகுணவல்லி அல்லது கற்பின் வலிமை ... 220
கிஷ்ணகுமாரி அல்லது கற்பின் லக்ஷியம் 254
தமயந்தி;—பிரிவிலும் ஒற்றுமை 482

விவேக போதினி.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"
—திருவள்ளுவர்.

தொகுதி 1. | 1908-ளு ஜூலை மீ | பகுதி 1.

ஸ்வகீயம்

OURSELVES

—

"தனவானுக்குத் தன்னூரிற் சிறப்பு, கல்விமானுக்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு" என்று கூறுவர் நம் தமிழ் நாட்டு முதியோர். சிறந்த இப்பழமொழியை நமது முன்னேக்கமாகக்கொண்டு எவ்விதத்திலும் நம் தமிழ் நாட்டு ஜனங்களுக்கு பலப்பிரயோஜனங்கள் வித்திக்கவேண்டுமாறு கைங்கிரியம் புரிய கங்கணங்கட்டியுள்ளவர்களில் யாமும் ஒருவரென நந்தேச வாஸிகள் கருதும் பொருட்டே, யாம் இறங்கியிருக்கும் பற்பல துறைகளில் பத்திரிகைத் துறையையும் ஒன்றென மனமுவந்து மதித்து இதனைக் கையெடுத்தாடக் கருதினேம். பஞ்சமும், பிளேகும், கொலையும், கொள்ளையும், நரசோர அகிருத்தியமும், ஆக்நேயாஸ்திரப்பிரயோகமும், கலகக் குழப்பமும் ஒன்றன்பின் ஒன்றாய் உண்டாகும் இக்காலத்தில், தேச நண்பர்களுக்குத் தொண்டுபுரியும் நல்லறிவுச்சுடராய் விளங்கக்கூடியதும், விவேகாமிருதத்தை அவரவர்களுக்கு ஊட்டி வித்வான்கள் நிரம்பிய நற்சபையில் நடனம் புரிந்தாடக்கூடியதும், ஸாதாரண ஜனங்களுக்குப் பரவசமுண்டாகும்படியான பரம ஔஷதமாம் பாஷானுகூலத்திற்கேற்றவண்ணம் புதிய புதிய பாடங்களை அன்னார்க்குக் கற்பிக்கக்கூடியதும் இன்னும் இவை போன்ற செப்புதற்கருமையான பலவிஷயங்கள் பொலிந்து நடமாடி நந்தேசவாஸிகள் மேன்மை யடைவிக்கக் கூடியதுமான பத்திரிகை ஒன்றில்லாததைப் பெருங்குறையாக வெண்ணியும், இப்போதுள்ள ஊக்கத்துடன் உழைக்கும் சிற்சில பத்திரிகைகளால் உண்டாகும் பலனை இப்பத்திரிகையினாலும் அணுவளவானாலும் நம் ஸகோதரர்கள் அடையட்டுமென்று எண்ணியும் 'விவேக போதினி' என்னும் பெயர்பூண்ட இப்பத்திரிகையை முன் கொண்டுவரத் துணிந்தோம். இம்மாதிரியான பத்திரிகை யொன்று இக்காலத்திற்கு வேண்டியதென்று எண்ணி, எமது நண்பர் பலரது வேண்டுகோளுக் கிணங்கியும் அவர்களது ஸந்துஷ்டியான ஆதரவைப் பெற்றும் இதனை வெளியிட முன்வந்தோம்.

நமது தேசத்தில் எத்தனையோ பத்திரிகைகள் ஆங்கில பாஷையில் பிரசுரிக்கப்படுகின்றன. அவை ராஜ பாஷையிற் பிரசுரமடைந்தாலும் அவைகட்குப் போதுமான ஆதரவுகிடைப்பது அரிதாயிருக்கும்போது, தேச பாஷாப் பத்திரிகைகளைக் கவனிப்பவரும் இருப்பார்களோவென்று பலர் சந்தேகப்படக்கூடும். அங்ஙனம் சந்தேகப்படுவோர்க்கு யாம் சொல்வதொன்றுண்டு. நமது நாடானது சீர் பட்டோங்கிச் சிறப்புற்று விளங்க வேண்டுமானால், தேச பாஷாப் பத்திரிகைகள் அதிகமாக வேண்டுவதைத் தவிர வேறுவழியில்லை. இதே கருத்தை ஆதாரமாய்க் கொண்டுதான் வங்காளியர், குஜராத்தியார், மகராஷ்டிரர் முதலினோர் முறையே, வங்காளம், கூர்ஜரம், பம்பாய் முதலான விடங்களில் ஸ்வதேச பாஷாப் பத்திரிகைகளை பிரசுரித்து அவைகளை போஷித்து வருகிறார்கள். வருவதனால்தான் பரோபகாரார்த்தம் இதம் சரீரம், என்றபடி ஜனோபகாரமான விஷயங்களைக் கவனிக்கவும் அவைகளுக்குத் தகுந்த காரியாதிகளை நிறைவேற்றவேண்டி முன் வந்துழைக்கவும், தத்தமக்குள்ள குறைகளையும், அபிலாஷைகளையும் வெளியிட்டு அவைகளைத் தடுத்து நிவாரித்துக் கொள்ளவோ, அல்லது பூர்த்தியாக்கவோ செய்யவும் பிறநாட்டாரது லௌகிக வைதிக வர்த்தமான விஷயங்களை நன்றாக அறிந்து தம் அறிவை விசாலப்படுத்திக் கொள்ளவும், அவர்களுக்கு இடமுண்டாயிருக்கிறது. நம் சென்னை ராஜதானியிலுள்ளோர் அனைவருமே ஆங்கிலத்திற் பயிற்சி யுள்ளவர்களல்லர். பயிற்சி யுள்ளோர்க்குத்தான் இங்கிலீஷ் பத்திரிகைகள் இருக்கின்றனவே, பயிற்சியில்லாத ஜனங்கள் என்னசெய்வது? இவர்களுக்கு ஆங்கில பாஷையில் பத்திரிகைகள் அதிகரித்துச் சுதேச பாஷையிற் குறைந்திருப்பது எவ்விதம் பொருந்தும்? ஆதலால் இந்த "விவேக போதினியில்," கல்வி, கைத்தொழில், வர்த்தகம், பயிர்த்தொழில், உத்தியோக விஷயம், சாஸ்திர விஷயங்கள், கல்வியிலும், மதியூகத்திலும் ஸாமார்த்தியத்திலும் மிகுந்த பெரியோரது சரிதங்கள்; இதிஹாஸ புராணாதி ஸாரங்கள், தமிழ் பாஷாபிவிருத்திக் குரித்தான இலக்கிய இலக்கண விஷயங்கள்; நீதியும் அறிவும் புகட்டும் நவீன நன்னெறிக் கதைகள்; பண்டிதோத்தமர்களும், கவீந்திரர்களும் இயற்றிய இன்னிசை நாடகங்கள்; ஆசாரச் சீர்திருத்தாமிச ஸம்பந்தமான பொதுக் குறிப்புகள்; இன்னும் அப்போதைக்கப்போது தோன்றும் இவைபோன்ற உபயோகமான விஷயங்கள், ஆகிய இவைகள் அனைத்தையும், மத ஸம்பந்தமான கலகங்களுக்கும், வீண் விதண்ட வாதங்களுக்கும் தர்க்ககுதர்க்கங்களுக்கும் இடங்கொடாது எழுதியும், ஆப்த நண்பர்களையும் விசுவாஸிகளையும் கொண்டெழுதுவித்தும், உழைக்கவேண்டுமென்பதே எமது முதல் நோக்கமாகும்.

நாகரீகம் மிகுந்த ஐரோப்பா, அமெரிக்கா, முதலான வெளி நாடுகளிலுள்ள பெரிய பெரிய பட்டணங்களிலும் சிறிய சிறிய குக்கிராமங்களிலும் வர்த்தமானப் பத்திரிகைகள் தின, வார, பக்ஷ, மாதகாலங்களில் வெகு பிரபலமாய் நடைபெற்று வருகின்றன.

“லோகோ பின்னருசி:” (உலகம் பலவிதம்) என்பதை அந்நாடுகளிலுள்ளோர் நன்றாயறிந்தும், உலகத்திலுள்ள ஸர்வ ஜனங்களையும் எல்லா விஷயங்களிலும் திருப்தி செய்வது முடியாதென்பதை உணர்ந்தும், தம்மால் இயன்றவரை எல்லோருடைய ஸௌகரியங்களையும், அபிப்பிராயம் மனப்பாங்கு முதலியவைகளையும் அனுசரித்து, தேச க்ஷேமாபிவிருத்தியை நாடிய பொதுவிஷயங்களையும், வர்த்தக வியவகாரப் பயிர்த்தொழில்களின் அபிவிருத்தியையும் குறித்து அப்போதைக்கப்போது அவர்கள் பத்திரிகைகளில் எழுதிவருகிறார்கள். அது காரணமாக, மானிட இயல்பும் அவரது செயலும் மேம்படுதற்கு இடமுண்டாகின்றது. நிற்க, ஒருவன் எத்தன்மையான விஷயங்களை அடிக்கடி பார்க்கின்றானோ அல்லது நினைக்கின்றானோ, அதற்குத் தக்கவாறே அவனது மனதும் மாறுதல் அடையும்; மனஸாகும்

அந்தக்கரணத்தின் தன்மை அவனது நினைவைப் பொருந்தியதாதலின், நினைக்கும் போதெல்லாம் மனுஷ்யன் நல்ல விஷயங்களையே நினைத்துவரவேண்டும்; இல்லாவிடத்து, மனஸானது நன்னெறியில் நாடாமல், கொலை, கொள்ளை, நரசோரம் ஆகிய இவைபோன்ற கொடிய செயல்களையே நாடிநிற்கும். அப்படி நாடிநிற்பது மனப்பழக்கத்தின் விசேஷத்தினாலாவதென்பதற்கு உலகத்தின்கண் ஸகஜமாய் நடந்துவரும் தினஸரிச் செயல்களே சான்றாகும். மனப்பழக்கத்தின் ஒழுங்கை யனுஸரித்து ஆன்றோர்,

"கொலைக்களம் வார்க்குத்து சூதாடுமெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கும்"

ஸ்தலம் முதலியனவற்றை யடிக்கடி யணுகலாகாதென்று விதித்துமிருக்கிறார்களல்லவா? அதுபற்றியே அப்புறநாடுகளில் ஜனங்களுக்குத் தகுந்தபடி வர்த்தமானப் பத்திரிகைகள் ஏற்பட்டிருப்பதினால், அத்தேசத்தாரது வித்தியா விசேஷமும், அவர்களுக்குப் பொதுநன்மையின்மீதுள்ள அபிமானமும் செவ்வனே விளங்குகின்றன.

பத்திரிகைகள் அதிகமானால், ஜனங்களின் அறிவும் திறமையும் அதிகரித்து, ஒற்றுமையும் மேன்மையும் மேம்படும்; அவை மேம்பட்ட காலத்து நடுவுநிலைமை மாறாது பத்திரிகைகளை விருத்திசெய்ய வேண்டுமென்ற கொள்கையும் உண்டாகும். இந்தப் பிரதானக் கொள்கையே மொழிமுதற்கருத்தா யமைந்து இங்கிலாந்து தேசப்பத்திரிகைகள் பிரசுரமாவதினால் அந்நாட்டார் நாகரீகத்திற் பேரெடுத்துப் பெருமைபெற்று வாழ்கின்றனர். இங்கிலாந்து தேசமானது உருவத்திற் சிறிதேயெனினும், மற்றை தேசங்களுக்கெல்லாம் முதன்மையாய் விளங்குகின்றது. அது ஓர் மூலையிலிருந்தாலும், உலகத்து வியாபாரங்களிலும் தொழில் அமிசமாயும் பௌதிக ரஸாயன சாஸ்திரியாம்சமாயும் தேர்ச்சியைக்காட்டிக் காலூன்றும் ஒவ்வோரிடத்திலும் தனது உன்னத ஸ்திதியை விளக்குகின்றது. இவையல்லாது ஜனங்களுக்குள் மனோரம்மியத்தை யுண்டுபண்ணி ஒருவரது மனோபிப்பிராயம் மற்றவரது மனதிற் பதியவும், பதிந்தபின்னர் பந்தத்தை (தேசக்கட்டென்னும் ஐகமத்தியத்தை) பலப்படுத்தி திரவியம் ஸம்பாதிக்கவும், அத்திரவியத்தைக்கொண்டு ராஜாங்கத்தை வேரூன்றி விசுவாகாரமான வியாபாரங்களை விரிவாக்கவும் வேண்டிய குறைகளை அறிய இடம் ஏற்படுகிறது. இவைகட்கெல்லாம் ஆதிகாரணம் எது? ஒப்பிலா ஊக்கமும், மாசுமறுவற்ற மனவொற்றுமை மிகுந்த ஆர்வமும், விவேக மில்லாவிடில் இவ்விரண்டும் வரா. ஆகவே வியாபாரப் பெருக்கத்தினாலும் தொழிலூக்கத்தினாலும் சரீரப் பிரயாசையினாலும் உலகெல்லாம் புகழ் படைத்து விளங்கும் தேசத்தாரை யொப்ப நம் நாட்டுச் செல்வரும் செல்வியரும், சிறுவரும் சிறுமியரும், உத்தியோகஸ்தரும், ஸாமான்யரும், விவேக மிகுந்து வரவேண்டுமென்று நினைத்து, இந்தியாவின் சக்கரவர்த்தியார் நம் மாக்ஷிமை தங்கிய எட்வர்ட் மகாபிரபுவின் ஆதீனத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸர்வானுகூலங்களையும் கையேந்தி இப்பத்திரிகையை நடத்தத் துணிந்தனம்.

வேண்டுவார் வேண்டுவன வெல்லாமளித்து, அவரவர்களுடைய வறுமைக்கு வறுமையைக் கொடுப்பதாகிய கற்பகத்தருவிற் படர்ந்திருக்கிற காமவல்லியானது இன்சுவைக்கனியை இன்பமுடன் ஈன்றது போல நந்தமிழ்நாட்டு ஜனங்களுக்கு புத்தி விசாலம் பெருகும்படி அவர்களது நுண்ணுணர்வின்மையாகிய வறுமைக்கு வறுமையை யளிக்கும் ஸாதனமாய் இவ் 'விவேக போதினி'யை, வித்வான்களின் விவேக மிகுந்த நற்போதங்களான அமிர்த தாரையின் வருஷிப்பை ஆதாரமாய் நம்பி, ஆரம்பித்திருக்கிறோமாதலின், எமது எண்ணங்களையும் முயற்சிகளையும் பயன்படும்படி, ஸர்வாந்தர்யாமியான இறைவன் கிருபை புரிவாராக! எல்லாம் "எனையாளும் ஈசன் செயல்"! "அவனன்றி ஓரணுவுமசையாது" ஆகவே அவனது கடாக்ஷத்தை பெருவதற்கிணங்க

"ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து."

மதவிஷயங்களின் ஸ்வரூபம்

RELIGION: ITS NATURE

உலகத்தில் இருக்கும் ஜனங்கள் எல்லோருக்கும் துன்பத்தை அணுகவொட்டாது தடுத்து, இன்பத்தை அடையவேண்டும் என்பதே முக்கிய கருத்து. இந்த ஆவலால்தான், எல்லோரும் மிகுந்த சுறுசுறுப்புடன் அனேகவித காரியங்களைச் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் எந்தக் காரியத்தைச் செய்யப் புகுந்தபோதிலும், அதன்முடிவில் அப்பொழுது தமக்கு இருக்கும் துக்கம் நீங்கி ஸுகம்வரும் என்றே நம்புகிறார்கள். அவர்கள் முயலும் வழி கெட்டவைகளாக இருப்பின், வரும் ஸுகம் நிலையில்லாததாயும், நல்லவைகளாயின், கொஞ்சகாலம் நிலைத்திருப்பதாயும் இருக்கும். இந்த ரகஸியத்தை அறியாத ஒவ்வொருவரது மனதும் ஸதா மருண்டு, கெட்டவழிகளிலேயே ஓடிக்கொண்டிருக்கும். இதை அறிந்து நன்றாகத்தெளிந்த உடன், அவர்கள் விழித்துக்கொண்டு நல்ல வழிகளில் திரும்புவார்கள்.

ஆரம்பத்தில், கெட்டவழிகள் யாவும் இன்பமாக காணப்படுவதால், முன் சொன்ன ரகஸியம் எளிதில் ஸாதாரண ஜனங்கள் மனதில் பதியாது. மேலும் இகலோகத்தில் கெட்டவழிகளிலிருப்பவர்களுக்கு ஸுகமும் நல்லவர்களுக்கு கஷ்டமும் வந்துகொண்டிருப்பது ஸகஜம். தர்மபுத்திரர், ஸீதை முதலியவர்களைப் போன்ற ஸன்மார்க்கர்களுக்கு, துரியோதனன், இராவணன் முதலிய துன்மார்க்கர்களுக்கு உண்டானதுபோன்ற இகலோக ஸுகம் உண்டாகவில்லை. தாம் இருந்தவரையில் பலவித கஷ்டங்களையே அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். உலகத்தின் நிலை இவ்வாறிருக்க, 'இங்கற்றவர்க்கு அங்குண்டு' என்று எவ்வளவு தான், நாம் வேதாந்தம் எடுத்து யுக்திபூர்வமாகக் கூறிய போதிலும், ஸாதாரண ஜனங்களுக்கு நேர்மையான மார்க்கங்களில் நடந்து நிலைபெற, மனம் எளிதில் இசையமாட்டாது.

ஆகையால் எவ்வளவுதான் யுக்திக்குப் பொருந்தும்படி நல்லோருக்கு வரும் துயரங்கள் யாவும் துக்க ரூபமான ஸுகங்கள் என்றும், கொடியவர்களுக்கு வரும் மேன்மை யாவும் ஸுகரூபமாக வரும் துக்கங்கள் என்றும், எடுத்துரைத்தபோதிலும், இவைகளின் உண்மையை மன உருக்கத்துடன் அங்கிகரிக்கும் திறன் இருந்தால் அல்லது, கேட்போர்க்கு இவைகள் பயன்படா. இம்மன உருக்கத்தோடு அங்கிகரித்தவாறு நடந்து நிலைபெறுவதற்கு மன ஊக்கம், அவசியம் இருத்தல் வேண்டும்.

இந்த ரகஸியத்தின் அருமையையும் சிறப்பையும் ஒரு பெரியவர் பின்வருமாறு விவரித்திருக்கிறார்.

'எதார்த்தத்திலேயே இவ்வுலக இன்பங்களைப் போல் நமக்கு விரோதிகள் வேறு ஒன்றுமில்லை. நம்முடைய நிஜஸ்வரூபத்தை நம்மிடமிருந்து மறைத்து நாளைவரும் நெற்குவியலிலும் இன்றுள்ள பிடி விதை பெரிதென்று விழுங்கி வீணே நாள் கழிக்கும் 'நீக்ரோ' ஜாதியாரைப்போல் நாம் நாளை அடையக்கூடிய பிர்ம்மானந்த ஸுகத்தை மறந்து இன்றுள்ள சிற்றின்பத்தில் முழுகி மயங்கும்படி நம்மைச் செய்கின்ற, அற்பமாயும் அநித்தியமாயும் பயனற்றவும் தமோகுண சம்பந்தமாயும் துக்ககரமாயும் அஸுர குண ஸ்வரூபமாயும் நமக்கும் பிறருக்கும் ஜனன மரண ஸம்ஸாரமாகிய அனர்த்த பரம்பரைக்கு ஹேதுவாயும் உள்ள இவ்வுலக இன்பங்கள் உயர்ந்தோரால் விரும்பற்பாலன வன்று. 'இங்கற்றவற்கு அங்குண்டு' என்றபடி அநேகருக்கும் துன்பமே ஒரு பெரிய மோக்ஷசாதனமாயிருக்கிறதாதலால், தனவானுடைய தனத்தையும், ரூபவானுடைய ரூபத்தையும் போகத்தில் உல்லாசமாய்க் களித்திருப்பவரது போகத்தையும் கண்டு நாம் பொறாமை கொள்ளாது அவற்றிற்கு ஆளாயிருப்போருக்கிரங்கி துன்ப ரூபமாக கடவுளது அனுக்கிரகத்தைப் பெற்றோரைக் கண்டு கைகூப்புவதே இரகசியமான தத்துவ வழியாம்.'

ஒருவனுக்குப் பகுத்தறிவு மாத்திரம் இருக்குமாயின், அவனுக்கு நன்னடக்கைக் கோட்பாடுகளின் காரணங்கள் முதலியன நன்றாய்த் தெரியலாம். ஆனால் மிகுந்த கஷ்டதிசை அல்லது உயர்ந்த ஸுக நிலைமுதலியன வருங்கால்,

யுக்தியால் நல்லது என்று கண்டறிந்த மார்க்கங்களில் நடக்க அவனுக்குத் திறனில்லாமல் போய் விடும். சிற்சில ஸமயங்களில் தன் யுக்தியாலேயே தான் நடக்கும் கெட்ட வழியை நல்லதெனக் கொள்ளும் தருணமும் வந்து விடும். இம்மாதிரியான ஸமயங்களில் நேர் வழியில் நடப்பதற்கு மன உருக்கம் அவசியம் வேண்டும். இதனால் தான், மனது அவனை எப்பொழுதும் கண்டித்துக் கொண்டே இருக்கும். இந்த உருக்கத்தின் மாறுபாட்டிற்கே மனச்சாட்சி என்றுபெயர். இந்த உருக்கத்தாலேயே நல்ல வழியில் நடப்பதற்கு வேண்டிய ஊக்கமும் வந்துசேரும். இம்மன உருக்கத்தோடு ஸம்பந்தப்பட்டு வெளிவரும் நன்னடக்கைக் கோட்பாடுகளுக்கே மத விஷயம் என்று பெயர்.

மத விஷயங்களின் ஸ்வரூபத்தை சிற்சில உதாரணங்கள் மூலமாக விவரித்து, அவைகளுக்கும் நன்னடக்கைக் கோட்பாடுகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தை நன்கு விளக்குவோம். 'நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்,' என்கிற பழமொழி நன்னடக்கைக் கோட்பாடு, ஸன்மார்க்கமான யுக்திவாதம்.

'அத்தமும் வாழ்வு மகத்துமாட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டேவிம்மி விம்மி யிரு
கைத்தலைமேல் வைத்தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.'

என்ற பட்டினத்தடிகள் வாக்கு உருக்க ஸம்பந்தப்பட்ட யுக்திவாதம், மதவிஷயம். 'இந்திரிய ஸுகங்கள் மனிதனைக் கெடுத்து, ஒருவனை வேறு விஷயங்களில் மனதைச் செலுத்த வொட்டாது தடுத்து விடும். ஆகையால் அவைகளை விட்டு நீங்குமின்' என்பது நன்னடக்கைக் கோட்பாடு.

'அறந்தானியற்று மவனிலுங்,
கோடியதிக மில்லந்
துறந்தா, னவனிற் சுதகோடி
யுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக் கற்றறிவோடிருந்,
திருவாதனையற்
றிறந்தான் பெருமையை யென்
சொல்வேன் கச்சியே கம்பனே'

என்பது மதவிஷயம். 'நாம் எல்லோரும் நியாயமாகவே நமது வாழ்நாட்களை கழிக்க எண்ணுகிறோம்; ஆனால் நமது தேக தர்மம் அதற்கு விரோதமாக இருக்கிறது' என்பது நன்னடக்கைக் கோட்பாடு.

மூனார் விழியைக் கடந்தேறி,
வந்தனன் வாழ்குருவுங்
கோனாகி யென்னைக்குடியேற்றிக்
கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந்தாலுங்,
பேறிது பொய்யன்று கா
ணூனுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே'

என்பது மதவிஷயம். 'ஒருவன் தன் சொற்போல நடப்பானேயானால் அதுவே மிகச் சிறந்தது' என்பது நன்னடக்கைக் கோட்பாடு.

'வாசக ஞானத்தால் வருமோ சுகம் பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே'

என்பது மதவிஷயம். 'உன்னைக் கடவுள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று எண்ணிச் சிருஷ்டித்தாரோ அவ்வாறு இரு' என்பது நன்னடக்கைக் கோட்பாடு. அப்பர் அருளிச்செய்த, 'தலையே நீ வணங்காய்' என்று தொடங்கும் திருஅங்கமாலை மதவிஷயம். இதுபோல் வேதங்களில் காணப்படும் அர்த்தவாத சுருதிகளும், புராணங்களில் காணப்படும் கதைகளும் நன்னடக்கைக் கோட்பாடுகளே. வேதங்களில் காணப்படும் ஆனந்தக்களிப்பு, புராணிகளில் காணப்படும் பக்தர்களது மெய்மறந்த ஸ்தோத்திரங்களும் மதவிஷயங்கள். வேதாந்த விசாரம் (சிரவணமனனம்) நன்னடக்கையைச் சேர்ந்தது, கேட்டபடி நிஷ்டை பழகுதல் (நிதித்யாஸனம்) மதவிஷயம். இவ்வுதாரணங்களிலிருந்து மதவிஷயங்களின் ஸ்வரூபம் இன்னதென்பது எளிதில் விளங்கும்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், B.A., L.T.

தமிழ் வசன நடையின் இலக்கணம்

TAMIL PROSE: ITS STYLE

நம்மனத்தின்கண் தோன்றும் எண்ணங்களை மற்றவர்களுக்குவெளிப்படுத்துதற்கான கருவி, நமதுபாஷையாகும். நமதுபாஷைமூலமாகவே பிறர் மனத்திற்றோன்றி வெளியாகின்ற விஷயங்கள் யாவற்றையும் நாம் அறிந்துகொள்ளுகின்றோம். இப்போது எமது மனத்திற்படும் விஷயங்களை எமது பாஷைமூலமாக இப்பத்திரிகையைப்படிக்கும் பலர்க்குந் தெரிவிக்கின்றோம். பாஷை எழுதப்படும்; பேசப்படும். எழுதியதைப் பிறர் எளிதில் அறிய வேண்டுமாயின் வசனநடையில் எழுதுவதே பொருத்தமானது. ஆதலால் தமிழ் வசன நடை இவ்வாறு இருத்தல் வேண்டும், அதன் இலக்கணம் இன்னதென்பதை இங்குக் கூறுவாம்.

(1) மேத்யூ ஆர்நால்ட் (Mathew Arnold) என்னும் ஆங்கில வித்துவானுடைய அபிப்பிராயப்படி நல்ல வசன நடையின் இலக்கணங்கள் ஒழுங்கு, சமம், தெளிவு, நிறை என நான்காம். ஒழுங்கு என்பது, பொருள் நன்கு விளங்க, எவ்வெவ்விடத்திற் சொற்களிருத்தல்வேண்டுமோ அவ்வவ்விடத்திற் சொற்களைப் பொருந்த அமைத்தல். சமம் என்பது நடையில் ஏற்றத்தாழ்வு இன்மை. அஃதாவது ஓரிடத்து எளிய நடையும் ஓரிடத்துக் கடுமையான நடையுமாகிய வேறுபாடு தோற்றாது ஒரேதன்மையாக இருக்கும்படி அமைத்தல். தெளிவு என்பது விளங்கக் கூறல். நிறை என்பது சொல்லமைப்பிலும் நடை அமைப்பிலும் துலாக் கோலில் நிறுத்தாற் போன்ற ஓர் அளவு தோற்றுவித்தல். இந் நான்கிலக்கணங்களும் நிரம்பி விளங்கும் வசனநூல்களுட் சிறந்தது தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரம் என்னும் நூல். மேற் சொன்ன நான்கிலக்கணங்களுள் நிறை என்பதைப் பின் வரும் நச்சினார்க்கினியர் நடையிற் காணலாம்.

"கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாயிருத்தலிற் [கரும்பு.
நல்லார் உறுப் பெல்லாங் கொண்டு இயற்றலிற் [றேன்.
கணவற்குச் செல்வத்தைக் கொடுத்தலிற் றிரு..
காலமன்றியுங் கேட்டோர்க்கு இன்பஞ் செய்தலின் [குயில்..
நடையால் அன்னம். சாயலான்மயில். நோக்கத்தால் மான்' [சிந்தாமணி உரை

இதன்கண் முதல் நான்கு வாக்கியங்களும் ஒரு நிறை. ஏனைய மூன்றும் பிறிதொரு நிறை.

வசன நடையின் இலக்கணங்களுள் சமம் ஒன்று என்றோம். அஃதாவது, எவ்வவ்விடத்து நடை கெம்பீரமாகயிருத்தல் வேண்டுமோ அவ்வவ்விடத்துக் கெம்பீரமாகவும், எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு ஏற்றதாயும், சந்தர்ப்பத்துக்குப் பொருந்தினதாகவும் இருத்தல் வேண்டும்.

வசன நடை அழகாய், விரும்பற் பாலதாயிருக்கவேண்டுமானால் முக்கியமாய் அதற்கு வேண்டிய லக்ஷணம் 'தெளிவு' என்பதே. 'வசன நடைக்கு வனப்பு நாடிடின், சொற்றொறுந் தெளிவு தோன்றக் கூறுக' எனக் குவின்டிலியன் (Quintilian) எனும் புலவர் பெருமான் சொல்லுகிறார். தெளிவு என்னும் இவ்விலக்கணம் நிறைந்திருப்பதாற்றான் ஆறுமுக நாவலரது வசனநடை எல்லாராலுங் கொண்டாடப்படுகின்றது.

(2) வசனநடை பேசும் நடையினும் வேறுபாடுடையதாய், இலக்கணம் நிறைந்ததாய், அதனிலும் அதிக கெம்பீரமாகவே இருக்கவேண்டும். ஜான் யர்ல் (John Earle) என்னும் ஆங்கில வித்துவான் 'செய்யுள் நடை வானத்திற் பறக்கின்றது. வசனநடை மண்மிசை நடக்கின்றது. ஆனால் கால் தரையில் இடறாமல் வெகு கெம்பீரமாக நடக்கின்றது' எனக்கூறுகின்றார்.

(3) வசனநடையின் பிறிதோரிலக்கணமாவது, சொற்றோறும், சொற்றொடர் தோறும் வாக்கியங்கள்தோறும் வேறுபாடு காட்டுவது

அஃதாவது சொன்ன சொல்லையே கூறாது, ஏற்ற பிறிதொரு சொல்லால் ஓதுவது. இவ்விலக்கணத்தைப் பஞ்சதந்திரத்திற் காணலாம். ஓரிடத்திற் குதிரை என்றால், மற்றோரிடத்திற் பரி என்றும், பிறிதோரிடத்திற் புரவி என்றும், இன்னுமோரிடத்தில் இவுளி என்றும், வேறோரிடத்தில் அசுவம் என்றும், பின்னும் ஓர் இடத்தில் துரங்கம் என்றும், அடுத்ததோர் இடத்திற் கந்துகம் என்றுங் கூறுவது; இவ்வகையாகப் பலவேறு சொற்களை உபயோகிப்பதாற் படிப்போர்க்கு ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் கிடைக்கின்றன.

தமிழ்ப் பாஷையில் எண்ணிறந்த சொற்கள் இருக்கின்றன. "தமிழ் மொழியில் ஏராளமான சொற்கள் உள்ளன என்பது யாழ்ப்பாணத்து அமெரிகன் பாதிரிகள் தொகுத்த ஓர் அகராதி, 58,500 வார்த்தைகளினும் அதிகமான வார்த்தைகள் கொண்டுள்ளதென்பதால் நன்கு தெரியவருகின்றது. அது மாத்திரம் அல்ல, அவ்வகராதியில் வாராதவையான, ஆயிரக்கணக்கான தொழிற் சம்பந்தமான சொற்களும், ஆயிரக் கணக்கான விசேட சொற்றொடர்களோடு பழமொழிகளும், ஆயிரக்கணக்கான ஆன்றோராராய்ச்சி செய்த அரும்பதங்களும், அருந் தொடர் மொழிகளும் தமிழ்ப் பாஷையில் உள' என டாக்டர் கால்ட்வெல் என்னும் பாதிரியர்ர் குதூகலத்துடன் கூறுகின்றார்.

(4) தெளிவு என்னும் இலக்கணம் சிதைவு படாது எவ்வளவு தூரங் கூடுமோ அவ்வளவு வடமொழியை நீக்கித் தென் மொழியாகிய தமிழையே உபயோகப் படுத்தல் வேண்டும். வடமொழி கலவாத தென்மொழி வாக்கியந் தமிழர் செவிக்கு மிக்க இனிமையாயிருக்கும். உதாரணமாக, 'தேவர்கள் புஷ்ப வர்ஷம் வருஷித்தார்கள்' என்பதிலும் 'வானவர் பூமழை பொழிந்தார்' என்பது செவிக்கு மிக்க இன்பத்தைத் தருகின்றது.

(5) செந்தமிழ் நடை எழுத வேண்டின், தமிழரோடும், தமிழ்ப் பாஷையிலும், தமிழ் நூல்களிலும் நல்ல பயிற்சி யிருக்கவேண்டும். அகராதியைக் கொண்டு பொருள்கண்டு உபயோகிப்பது அபாயகரமாகும். தமிழ் கற்று வந்த பாதிரியார் ஒருவர் ஒருமுறை சிலபண்டங்களை வெயிலில் உலர்த்தவேண்டியிருந்த போது, தனது சேவகனை நோக்கி தனது ஆங்கில மொழிகளின் கருத்துக்கேற்ப, 'கார்யத்தை எடுத்து சூர்யத்தில் போடு' (Put the things in the Sun) என்றாராம். ஆதலால் சரியான இடத்திற் சரியான சொல்லை உபயோகப் படுத்தவேண்டும்.

(6) உபயோகத்தினின்றும் பழையனவாய்க் கழிந்த சொற்களை இப்போது உபயோகப்படுத்தக் கூடாது. கள்வன் என்னும் சொல்லைத் 'திருடன்' என்னும் பொருளில் உபயோகப் படுத்தலாமே ஒழிய, அதன் பழைய அர்த்தமாகிய 'நண்டு' என்னும் பொருளில் சொல்லலாகாது. எளிய சொற்களாற் சொல்லக் கூடியதைக் கடின சொற்களால் அநாவசியமாகக் கூறலாகாது. 'அவன் முள் வழியிற் சென்றான்' எனச் சுலபமாகக் கூறுவதைவிட்டு 'அன்னான் முள்ளதர்ப் படர்ந்தனன்' எனலாகாது.

(7) காலத்துக்கு ஏற்றவாறு புதிது புதிதாக வார்த்தைகளைப் பிறபாஷையினின்றாவது, உண்டு பண்ணியாவது உபயோகப்படுத்தலாம். இங்ஙனம் பிறபாஷைச் சொற்களை ஏற்று உபயோகப் படுத்துவதுதான் காலந்தோறும் வளர்ந்துவரும் பாஷைகளுக்கிலக்கணம். ஆங்கிலபாஷை எவ்வளவோ பாஷைகளினின்று எவ்வளவோ சொற்களை மேற் பூண்டிருக்கின்றது. இங்ஙனம் மேற்கொள்வது பாஷையின் பெருமைக்குக் குறைவென்று அறியார் பலர் நினைப்பர். இங்ஙனம் மேற்கொள்ள வேண்டியது அவசியமெனக் கண்டு தொல்காப்பியரே தமது இலக்கண நூலில் 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' என்னும் சூத்திரத்திற் காட்டியிருக்கின்றார். நன்னூல் எழுதிய பவணந்தி யாரும் "பழையன கழிதலும் புதியன புகுதலும்,

வழுவல கால வகையினனே' என்னும் சூத்திரத்திற் பழைய சொற்கள் கழிந்து போதலும், புதிய சொற்கள் புகுந்து வருதலும், கால வித்தியாசத்துக்கு ஏற்பதாதலின், வழுவல்ல என விளக்கமாகக் கூறுகின்றார். பழையன கழிதலுக்கு ஓர் உதாரணமும் புதியன புகுதலுக்கு ஓர் உதாரணமும் இங்குக் காட்டுவோம்.

பழையன கழிதல்: தொல்காப்பியர் காலத்தில் ஆண் குதிரையைக் குறிக்கச் 'சேவல்' என்னும் சொல் வழங்கி வந்தது. "குரங்கினேற்றினைக் கடுவனென்றலும் * * * குதிரையுளாணினைச் சேவலென்றலும் * * முடிய வந்த அவ்வழக்குண்மையிற், கடியலாகா கடனறிந்தோர்க்கே.'' (தொல். மரபியல்). இச் சூத்திரத்திற்கு உரையெழுதிய ஆசிரியர் காலத்திலேயே 'சேவல்' என்னும் சொல்லுக்கு 'ஆண் குதிரை' என்னும் பொருள் இல்லாமற் போயிற்று. உரையாசிரியர் 'குதிரையைச் சேவல் என்றல் இக்காலத் தரிதாயிற்று' என்கிறார்.

புதியன புகுதல்: முற்காலத்தில் 'ச' என்னும் எழுத்து மொழிக்கு முதலில் வந்திலது. பிறகு சட்டி, சமழ்ப்பு முதலிய சொற்கள் ஏற்பட்டன. தொல்காப்பிய உரையாசிரியர்களும் சட்டி, சமழ்ப்பு முதலிய 'பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாம்' என உரைத்துள்ளார்கள்.

சொற்றொடர்களை உண்டு பண்ணுதல்: உளநூல் (Psychology), உயிர் நூல் (Biology) முதலிய உதாரணமாம்.

பிறபாஷைச் சொற்களையும் உபயோகப் படுத்தலாம்: சலாம், சபாஸ், ராவுத்தன் முதலிய இந்துஸ்தானி பதங்கள் முன்னரே நல்ல செந்தமிழ் நூல்களிற் பிரயோகிக்கப்பட்டுள. ஆங்கிலப் பதங்களும் தமிழில் தாராளமாய் நுழையத் தலைப்பட்டிருக்கின்றன.

(8) இலக்கண மமைய எழுத வேண்டுவது அவசியமாயினும் சந்தி முதலியவற்றை அளவிறந்து உபயோகித்தல் நன்றன்று. அங்ஙனம் உபயோகித்தல் கண்ணுக்கும் காதுக்கும் இன்பம் பயவாது. உதாரணமாக 'செங்கோல் நடாத்தும் அரசர் குடிகளின் இன்னல் நீக்கும் அருமுறைகளை நாடுவார்' என்பது தெளிவாயிருக்க, அதனையே, 'செங்கோனடாத்துமரசர் குடிகளினின்னனீக்கு மருமுறைகளை நாடுவார்' என எழுதினால், அது அவலக்ஷணமாயிருக்கின்றது.

(9) பொருள் தெளிவாக விளங்க அங்கங்கே ஆங்கில முதலிய பாஷைகளிலுள்ளவாறு, குறிகளை (punctuation) உபயோகப் படுத்த வேண்டும்.

ஆக, மேற்காட்டிய நவ லக்ஷணங்களையும் இன்னும் அவசியமான லக்ஷணங்களையும் நாடிக் கருத்துடன் எழுத முயன்றால் 'செந்தமிழ் நடை' என்பது விளங்கத் தோன்றும்.

இங்குக் கூறிய விஷயங்களின் விரிவை யாம் ஆங்கிலத்தில் எழுதிய 'தமிழ் வசன நூற்சரிதம் (History of the Tamil Prose Literature) என்னும் புத்தகத்திற் காணலாம்.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.

சிதம்பர மாஹாத்ம்யம்

தில்லை ஸ்தலமே ஸ்தலம்—"தில்லை தில்லை யென்றால் பிறவி இல்லை இல்லை'' யென்று மறை மொழியும், தொல்லை தொல்லையென்ற கொடு வினை'வல்லை வல்லை' யென்றகலும். சுவாமி உண்டென்பதும் அங்கே தான், இல்லையென்பதும் அங்கேதான். கடவுள் ஆனந்தத் தாண்டவம் ஆடுவதும் அங்கேதான், அசைவற்ற வெளியாயிருப்பதும் அங்கேதான். அறியாதாரும் அறிவைப் பெறுவது அங்கே தான். அறிந்தவர்கள் அனுபவிப்பதும் அங்கே தான். உருவமும் அங்கேதான். ஒளியும் அங்கே தான். சிருஷ்டியும் ஸம்ஹாரமும் அங்கே தான்.

> "பசியா மருந்தளிக்கும் பாமரகியத்தி
> லசையாமலே யாடு மம்பல நாதனைக்
> காணாத கண்ணென்ன கண்ணே.''
> "ஊராரு மறியாம லொளிகண்டு பிசகாமல்
> சீராருகண்கொண்டு எழும்பிய மண்டபம்
> காணாத கண்ணென்ன கண்ணே.''

உபநிஷத்தின் உட்கருத்தை உள்ளடக்கி அமைத்த ஆலயத்தையும் அதற்குள் சிருஷ்டிக்கு முன்னும் பின்னும் ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும் ஆகாசரூபத்தையும் ஆனந்த தாண்டவத்தையும் ஒருமித்து உருவகம் செய்திருக்கும் ஸபாபதியையும் ரகஸியவெளியையும் அவற்றிற்குப்பின்னுள்ள திருமூலமந்திரத்தையும் எண்ணி எண்ணி உருகுபவருக்கு மனம் நிலைபெறும் என்பதற்கு ஐயமில்லை.

பொருளாசை

AVARICE

மனதை சஞ்சலப்படுத்தும் ஆசைகளில் பொருளாசையும் ஒன்று. பூர்வகாலத்துப் பண்டிதர்கள், செல்வம் சேகரிப்பதே வாழ்க்கையின் ஸார்த்தகமாக வெண்ணும் மடமையைப் பலவாறு விரித்துக் கூறியுளர். அவர்கள் பொருளைப் பற்றிப் பேசுந்தோறும், பரிதாபம், வெறுப்பு, அவதூறு, ஆகிய இவையுடன் இகழ்ந்திருக்கின்றனர்; அளவற்ற ஐசுவரியத்தாலுண்டாகும் அபாயங்களை அடுக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆயினும், அகற்றலாற்றாத வலிமையுடன் மனதைப்பற்றும் இவ்வாசையை அறுத்துத்தள்ள புத்தி விசேஷமும் சாதுர்யமும் பயனற்றவையாயிருக்கின்றன. செல்வத்தை இகழும் ஞானிகளும் அதைப் பழிக்கும் கவிஞர்களும், ஒருவேளை சந்தர்ப்பம் பலித்து தாங்கள் திரவியமடைய வகை கண்டால், இவ்வாசை வலைக்குள் பெரும்பாலும் சிக்கி விழுவார்கள்.

இவ்வாறு செல்வத்தை, சொல் நயம் பொருள் நயத்துடனும், சாநுர்யத்துடனும், ஆழ்ந்த அறிவுடனும் இகழ்வது நியாயமெனக் காரணம் காட்டி, கல்விமான்கள் நம்மை களிக்கச்செய்யினும், அவர்கள் இக்கோட்பாட்டைத் தங்கள் நடத்தையில் ஏற்று விளக்கியதாகத் தெரியவில்லை. செல்வம் பெறச் சக்தியைப் படைத்த எம்மனிதனும் அதை வேண்டாமென மறுத்ததாகக் காணவில்லை; செல்வம் படைத்து அதன் அசமாதானத்தை அறிந்த பின்னரும், எவராலும் பொறுமைப்படப்படாததும், மனவமைதியையும் காலசகவாசத்தையு மளிப்பதுமான தரித்திரதிசையை இச்சித்து, தன் திரவியத்தை சூறையிட்டதையும் நாம் கண்டதில்லை.

பலர் தாம் கௌரவமும் செல்வமும் சம்பாதிப்பதற்கு அனுகூலமான சந்தர்ப்பங்களை நழுவவிட்டு, அதிர்ஷ்டம் அன்புடன் அளிக்கும் ஐசுவரியத்தை அசட்டைசெய்து அகற்றியிருக்கின்றனர் என்பது உண்மையே. இத்தகைய தங்கள் அலக்ஷியத்தைக் குறிப்பிட்டு அவர் எவ்வளவு பெருமை பேசினும், அல்லது பிறர் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு எவ்வாறு புகழினும், இம்மனிதர் உண்மையில் செல்வத்தை இகழ்ந்தவரல்ல; செல்வம் சேர்க்க அவசியமான உழைப்பையும் கவலையையும் மேற்கொள்ள அஞ்சினவரேயாம். இவர்கள், செல்வமென்னும் மலையின் சிகரத்தையடைய பிரயத்தனப்படாரெனினும், அம்மலையுச்சியைச்சேர இச்சையுடையவர்களே; தங்கள் உழைப்பாலன்றி அடையக்கூடாததை அனுபவித்தல் அவர்கள் மனதுக்கு சம்மதமானதே.

இன்னும் சிலர் தாமடைந்த பதவிகளை தாமாகவே ஒழித்து தனிமையை இச்சித்து, தம்பெரும் பெயரை ஜனங்கள் மறக்கும்படி நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் இவர்கள் நடத்தையும் வேதாந்திகள் கொண்டாடத் தக்கதல்ல. ஏனெனில், இத்தகையோர், தங்களால் காப்பாற்றிக்கொள்ளக்கூடாத பதவியை நீக்குகிறவர்களாயும், அவ்வாறு நீக்குவதால் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறவர்களாயுமிருக்கின்றனர். இல்லையாயின், ஆனந்தம் அடைய எப்பொழுதும் புது வழிகளைத்தேடும் குணம் பொருந்தியவர்களாயிருக்கலாம்; அல்லது, மனோ விசாரத்தால், எப்பதவியிலும் சுகம் காணாது, தாமடைந்த ஒவ்வொரு பதவியையும் ஒழிப்பதே அவர் வழக்கமாயிருக்கலாம். இவர் பிணியுற்ற மனமுடையவராதலால், எப்பதவியிலும் திருப்தி கொள்வதில்லை. தன்னந் தனிமையிலும் இவர்களை துக்கம், மனக்கிலேசம், அவநம்பிக்கை ஆகிய இவைகள் வாதிக்கும்.

ஆனால், இக்கல்விமான்கள் நன்மொழிகளை தனவான்கள் அலக்ஷியம் செய்கிறார்களெனினும், அவற்றால் பயனில்லையென்று மதியீனத்தால் மதிக்கலாகாது. உலகத்தில் மானிடர் பெரும்பாலும் ஏழைகளே; தங்களுக்கு எட்டாத பெரும் பதவியை நினைந்து மனம் வருந்துகிறவர்களே. இத்தகைய சர்வ சாதாரணமான அதிருப்தி யென்னும் நோய்க்கு மருந்தளிக்கும்

மகா புருஷரைக் கொண்டாட வேண்டியதே. அவர்கள், நாம் அடையக் கூடாத பொருளைத் தள்ளிவைக்கும் வகையையும், நம் கண்ணுக்குப் புலப்படும் செல்வ வித்தியாசத்தின் சிறுமையையும், நாம் தூர நின்று பார்த்துப் புகழும் பெரும் பதவிகளைக் கிட்ட நெருங்கின், அவற்றின் உயர்ச்சியும் பிரகாசமும் குறையுமென்பதையும், நமக்கு போதிக்கின்றனர்.

செல்வமென்னும் சூது மாதராள், கவனத்தோடு நோக்காத கண்கள் முன்னர், கையிலகப்படாது விநாடி தோறும் மாறி மாறி வரும் சாயல்களைக் காட்டி ஏமாற்றியும், பார்வைக்குப் பகட்டான வெளியலங்காரத்தால் வாழ்க்கையைச் சிங்காரித்தும், தனிமையும் தியானமுமமைந்த நேரங்களில் அவ்வாபரணங்களைக் கழற்றி யெறிந்தும் செய்யும் ஜால வித்தையை வெளிப்படுத்துவதே வேதாந்திகளின் கருத்தாகும். ஆனந்தமும் ஞானமுமடைய ஆர்வமுள்ளோன், சாதாரண ஜனங்களின் கண்களைக் கூசச்செய்வதும் அவர் மனதைத் துடிக்கச்செய்வதுமான பதவி வித்தியாசங்களையெல்லாம் ஒழித்தல்வேண்டும்.

தத்துவ விசாரணையும் மதவிசாரணையும் செய்யத் தங்கள் ஏழை ஸ்திதியால் அனுகூலம் பெறுத மனிதர், விஷயங்களைத் தங்கள் புலன்களால் பரீக்ஷித்தும் தங்கள் மனத்தால் ஆராய்ந்தும் வருகின்றனர். இவர்கள், உயர்ந்த பதவிகளை யடையப் புண்ணியம் பெற்றவரை மானிடரன்னென்றும் ஏதோ விசேஷ பிறவியென்றும் கருதுகின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளையன்றி மற்றெந்த விசனமும் கவலையுமில்லாத இவர், திரவியமிருக்குமிடத்தும் துக்கம் உண்டென்றும், விலையுயர்ந்த ஆடைதரித்து ஆபரணம் பூண்டு செல்வத்தில் நீந்தும் பாக்கியசாலிகளுக்கும் மற்ற ஏழைமானிடர் மனத்தைப் புண்படுத்தும் வருத்தங்கள் உண்டென்று நம்புவது கடினமான விஷயமே.

செல்வத்தின்மேல் சிந்தனை செலுத்தலாகாது என்னும் சித்தாந்தத்தால் பொருளாசையும் அதிகார வாசையும் அழிவதில்லை யெனினும், பொருட்குறைவால் உண்டாகும் அதிருப்தியை அது ஒருவாறு குறைத்து வாழ்வை இனிமையாக்குகிறது. மேலும், அது, பணம் சேர்ப்பதே பெரும்பாக்கியம் என்ற அசையாத மனோ நிச்சயத்தினின்று உதிக்கும் அளவற்ற ஆசையுடன் திரவியம் தேடப் புகுவதாலுண்டாகும் பொய், சூது, பலாத்காரம், கொள்ளை, வஞ்சனை முதலிய கொடிய செய்கைகளை நீக்குகின்றது.

பொருளைத் தேடுவதே வாழ்க்கையின் முக்கிய முடிவாக எண்ணி, வலிய ஆசையால் தூண்டப்படும் ஒவ்வொரு மனிதனும், வாழ்க்கைக்கு வழிக்காட்டிகளாய்க்கருதப்படும் அறிவும் அனுபவமும்அகன்ற ஆன்றோர் பரம்பரையாய்க் கூறி வரும் எச்சரிக்கையைக் கேட்டு அதிக அச்சங் கொண்டு, தான் தொடங்கும் காரியம் தன் பிரயாசைக்குத் தகுந்த சன்மானம் கொடுக்குமோ என்று சற்று நிதானித்தும், நன்மை தீமை நாடாது பொருளைப் பற்று முன்னர், அப்பொருளை அடைந்த காலத்தில் அதனால் என்ன உபயோகம் உண்டு என்பதை ஆராயாமலுமிருந்தால், அவ்வாராய்ச்சி அவன் ஆவலை பெரும்பாலும் தணித்து அவன் ஆவேசத்தை அடக்கிவிடும்.

திரவியம் நம்மிட மிருக்கும் போது பயனற்றது; செல்வம் நம்மைவிட்டுச் செல்லும் பொழுதே அது பயன்படுவது. அதனால் வாங்கப்படும் பொருள்கள்தான் நமக்கு உபயோகப்படுவன. செல்வம் படைத்தோர் அச்செல்வத்தால் வாங்க வல்ல விசேஷ சக்தி ஒன்றுமில்லை. ஞானி அதை எப்பொழுதும் இச்சிக்க மாட்டான், அதை உடையவனைப் பார்த்து பொருமைப் படவுமாட்டான்.

சரீர சுகத்துக்கு எவ்வளவு அனுகூலம் அளிப்பினும், செல்வம் நோயையும் வலியையும் தீர்க்க சக்தியற்றது. அதிக சுகத்துடன் வாழ்வதால்

தனவான்கள் சரீரம் பலஹீனமாயும், நோய்க் கிடமாயும் ஆய்விடுகிறது. செல்வம் மனதை விசாலப்படுத்தி, உணரும் வல்லமையை அதிக ரித்து, மனோ பாவனா சக்தியை மேல்படுத்திய தாக நாம் எப்பொழுதும் கேட்டதில்லை. அவ் வாறன்றி, தனவான்கள் முகஸ்துதி செய்வோ ரால் சூழப்பட்டும், உழைக்க அவசிய மில்லாத வராயுமிருத்தலால், தம் பொய் எண்ணங்களே உண்மையென்று நம்பியும் தம் மடமையை திடம் செய்தும் வருவதற்கு செல்வம் சகாயமா யிருக்கிறது.

செல்வம் எக்காலத்திலும் மேன்மையை உண் டாக்காது. இயற்கையிலேயே சிறிதாயமைக்கப் பட்டதை எதுதான் பெரிதாகச் செய்யக்கூடு ம்? வித்து எதுவோ, அதுவே விளையும். மன் னர் பட்ட மளிப்பினும், அப்பட்டம் புல்லரை உயர்த்தமாட்டாது. பெரும் செல்வம் படைத்த அரசர் பெயரால் இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்ய ப்படினும், உண்மையில், அதிகாரம் செலுத்தும் மனிதர், அறிவகன்ற அவர் அமைச்சரே.

ஆதலால், பணத்தாசை மனதைப் பற்றும் தோறும், நாம் நிதானித்து யோசிப்போம். அதிர்ஷடத்தாலும், உழைப்பாலும் செல்வம் சேகரித்த மனிதரை எவ்வாறு மாற்றுகிறது என்று பார்ப்போம். சம்பத்தால் திக்கு முக்காடியும், சுகானுபவ கருவிகளனைத்தையும் படைத்திருப்பினும், சுகமின்றியும், வேலை செ ய்யாமலிருப்பினும், சமாதான மின்றியும், கோ பமும் சிடு சிடுப்புமே உடையவர்களாயும், மற்ற மனிதரால் இகழப்பட்டும் வெறுக்கப் பட் டும் அவர் வாழ்வதை நாம் கண்டால், நம் பத விக்கு (உண்மையில்) இன்றி யமையாத தே வைகளை மாத்திரம் திருப்தி செய்தால், அதிக ஆவலுடனும் கவலையுடனும் தேடிச் செல்லும் பொருள் எதுவுமில்லை என்று நாம் அறிவோம்.

சி. சுந்தரமய்யர் பி. ஏ

உழவுநூல்
AGRICULTURE

சரித்திரம்:—

பழைய அநுபோகங்களிலிருந்து விஷயங் களை ஞாபித்துக்கொண்டு அவற்றினின்று உண்மைகளை அறிந்துகொள்ளும் சக்தி மனித ரிடத்தில் மாத்திரம் அமைந்துளது. ஆனால், இச்சக்தியை அநேகர் தம் ஜீவனோபாயத்தைத் தேடும் வேலை மிகுதியினாலோ, அல்லது விஷ யங்களை அறிந்துகொள்வதற்குப் போதுமான குறிப்புகள் கிடைக்காமையினாலோ நழுவவிட் டுவிடுகிறார்கள். பொதுவாய் நம் மூதாதையர், விஷயங்களைச் சேகரித்தும் அவ்வப்போது குறித்துவைத்தும் கொள்ளவில்லை. அப்படியே சில விஷயங்களைக்குறித்து வைத்திருந்தாலும், விவசாயத்தைப்பற்றிக் கவனிக்கவேயில்லை. ஆங்கில சரித்திரங்களிலும் வியவசாயத்தைப் பற்றி போதுமானபடி எழுதக்காணோம். இந்தியா சரித்திரத்தில் அதனிலும் குறை வாகவே வரைந்திருக்கிறது. நாகரிகமடைந்த ஒவ்வொரு தேசத்திலும், வியவசாயம் ஜனத் தொகையின் பெரும்பாலரது இன்றி யமையா ஜீவனோபாயத் தொழிலாகும். அதன் விருத்தி அல்லது நலிவு அத்தேசத்தின் நாகரீக மேன் மை அல்லது தாழ்மையைக் காட்டும் அறிகுறி யாகும்.

சரித்திரங்களில் வியவசாயத்தைப் பற்றிப் போதுமானபடி எழுதியிராத குறையினால் அவ்வக்காலத்தொகுதியில் அதன் நிலைமை எவ்வாறு இருந்ததென்று ஊகித்துக்கொள்ள இடமில்லை. ஐரோப்பிய சரித்திரங்களில் கண் டிருக்கிறபடியே இந்தியாவிலும் வியவசாயத் தின் தற்கால நிலைமை பலவாற்றானும் ஒத்திரு க்கிறபடியால் இத்தேசத்தின் வியவசாய நிலை மையைக் கற்பது அவசியமாகின்றது. இதன் நிலைமை மனிதனது பூர்வீக நிலைமையையும் தெரிவிக்கிறது. இத்தேசத்தில் காடு மலைக ளில் சஞ்சரிக்கும் குறவர்கள் நாகரிகமற்ற

வராய் மிருகங்களின் தோலை அல்லது உலர்ந்த சரகை உடுத்திக்கொண்டு இருப்பதை இப்பொழுதும் நாம் காணலாம். ஆனால் தேசத்தின் பெரும்பாலர் நாகரீகத் தேர்ச்சி பெற்று நாகரீகத் தொழில்களில் பரிச்சயம் உள்ளவராயிருக்கிறார்கள். நமது ஆசியாக் கண்டத்திற்றான் நாகரீகத்தின் பழைய நிலைமையையும் அறியக்கிடைக்கும், கீழ்நாடுகளிலுள்ள நீல நதி (The Nile), யூபிரிட்டீஸ் (The Euphrates) மற்ற் நதிகளிலும் வருடாந்திரத்தில் வெள்ளம் அமோகமாய்க் கரை புரண்டு ஓடி, தம்மிடத்தேயுள்ள கழனிகளில் 'வண்டல்' செழிப்பு மண்ணை ஒதுக்கி வருகின்றன. அவ்வாறு ஒதுக்கப்பெற்ற வண்டல்மண் சூரியவெப்பம் பட்டு சிறந்த உரமாகிவிடுவதால், வியவசாயிகள் விதை விதைக்கும் வேலையைத்தவிர, வேறு சிரமம் எடுக்கவேண்டியதில்லை. தன்னாலேயே பயிராகிவிடுகின்றது. ஆகையால் இந்நதிகளில் வரும் பருவப் பிரவாகங்களின் ஒழுங்கைப் பற்றிக்கொண்டு வியவசாயம் நடத்தும்படி வியவசாயிகளைத் தூண்டின. இவ்வெள்ளங்களாலும் அவற்றினால் ஒதுக்கப் பெறும் வண்டல் மண்ணினாலும், வயல்களின் கரையானது அழிந்துபோகுமாதலால் ஒவ்வொரு வருஷமும் புதிதாக எல்லைகள் குறிக்கவேண்டியிருக்கும், நக்ஷத்திரங்களின் நிலையை வைத்து வருஷாந்தர வெள்ளத்தின் வரவை எதிர் பார்த்து வந்தார்கள். இவ்விதமாக எகிப்து(Egypt) தேசமானது நாளாவிருத்தியில் வியவசாய, பூகணித (Geometry) வானசாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றது.

இம்மாதிரியாகவே ஆசியா முழுவதும் மேற்குறித்த சாஸ்திரங்கள் விருத்திபெற்று வந்தன. எகிப்து தேசத்திலிருந்து கிரேக்கரும், ரோமர்களும் (The Greeks and the Romans) சாஸ்திரங்களின் அறிவை கற்றுப்போய், பின் ஐரோப்பா முழுவதிலும் பரவச்செய்தார்கள். அங்குமிங்கும் சுற்றித்திரியும் சில ஜாதியாரைத் தவிர, பழையகாலத்திலுள்ளவர்கள் தத்தம் கிராமாந்தரங்களி லிருந்துகொண்டு அவற்றைச் சுற்றியுள்ள நிலங்களைப் பண்படுத்தி வேளாண்மை நடத்தியும் கிராமத்தின் சமுதாய மேய்ச்சல் நிலங்களில் தம் ஆடுமாடுகளை மேய்த்தும் வந்தார்கள். ஜனங்கள் சொற்பமாகவும் செட்டாகவுமிருந்தபடியால், மேற்குறித்த சௌகரியங்களே அவர்கள் ஜீவனோபாயத்துக்குப் போதுமானவையா யிருந்தன. ஆனால் ஜனத்தொகை யதிகரித்தும், நாகரிகம் விருத்திபெற்றும் வந்தபோது மேலான சௌகரியங்களை நாடினார்கள். அதனால் அதிகமாய் நிலங்களைத் திருத்தியும் அவற்றைத் தகுந்த பலனளிக்கும்படி முயற்சித்தும் வர அவர்களுக்கு இடமேற்பட்டது. தற்காலத்தில் இவ்விஷயமாய் (அதாவது தரிசு நிலத்தைப் பண்படுத்துவது) ஏற்கனவே போதுமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவ்வாறு உழவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்களைத் தக்கபடி உரமிட்டும் (Natural and Artificial manures) அந்தந்தக்காலத்துக்கு ஏற்றவாறு பயிர்களை விளைவித்தும் வியவசாயத்துக்கு இன்றியமையாத் துணையாகிய கால்நடைகளை விருத்தி பண்ணியும் வரவேண்டுவதே இனி எடுக்கவேண்டிய முயற்சிகளாகும்.

இவ்விஷயத்தில் மேநாட்டார் மிகுந்த ஊக்கத்தைக் காட்டி கீழ் நாட்டாரைக் காட்டிலும் பலமடங்கு பலனையும் பெற்றிருக்கிறார்கள். புராதன காலத்தில் வியவசாயக் கருவிகளாக உபயோகிக்கப்பட்டு வந்தவைகள் சாமான்யமாய்க் கையினால் வழங்கக்கூடிய மரக்கருவிகளே. ஆனால் தற்காலத்தில், இயந்திரங்களின் வல்லமை யாருக்கும் தெரிந்ததே யன்றோ! ஆகையால் கருவியின் அபிவிருத்தியை நிதர்சனமாய் அறிகின்றோமல்லவா? உதாரணமாக, கலப்பையைப்பற்றி விசாரிப்போம். ஆரம்பத்தில் இது கையிற்பிடித்து தோண்டுவதற் கேற்றதாகவும் வளைவாகவும் இருந்தது. பின்பு நிலத்தைக் கிழித்துச் செல்வதற்காக சிறிய இரும்புக்கம்பியை இதில் நுழைத்துக்கொண்டார்கள். இதை இழுத்துச்செல்வதற்குக் காளைகளைப் பூட்டினார்கள். இம்மாதிரியான கலப்பையே தற்காலத்தில்

இந்தியாவில் வழங்கி வருவது. இதற்கு அடுத்த படியாக நிலத்தில் மண்ணை நன்றாய்த் திருப்பிப்போடக்கூடிய 'இறக்கை'(Mould Board) யென்பது சேர்க்கப்பட்டது. கடைசியாக, சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் கலப்பையை முற்றுப் பெற்ற நிலைமையில் காண்கிறோம். மேற்குறித்த முற்றுப்பெற்ற கலப்பை மேனாட்டில் ஏற்படுத்துவதற்குமுன், கீழ்த்தேச வியவசாயத்துக்கும் மேனாட்டு வியவசாயத்துக்கும் மிகுந்த வித்தியாசம் இல்லை.

ஆகையால், இப்போது இந்தியாவில் வியவசாய விஷயமாய் ஜனங்கள் பரிசோதனைகள் நடத்திவரத் தலைப்பட்டிருக்கிறது போலவே, அப்போது ஐரோப்பாவில் ஜனங்கள் பரீக்ஷைகள் செய்ய முயற்சித்து, அவற்றினின்று தக்கபலனையும் கண்டார்கள். ஆனால் பெரும்பாலர் அவற்றின் பலனை யடைய வில்லை. அவர்கள் இன்னும் தம் மூதாதையர் அநுசரித்துவந்த வழக்கத்தையே பின்பற்றி வந்தார்கள். இச்சமயத்தில் ஜெத்ரோட்டல் (Jethrottel) என்னும் ஓர் வியவசாயநூல் ஆசிரியர், அவ்விஷயத்தைப் பற்றிச் சில கோட்பாடுகளை வெளியிட்டார். கி. பி.1731 வருஷம் வரை பயிர்ச்செடிகள் எவ்வாறு உணவைக் கிரகிக்கின்றன என்றுவது, எப்படி வளர்கின்றனவென்பதைப் பற்றியாவது, ஜனங்கள் திட்டமான படி தெரிந்து கொள்ளவில்லை. டல் என்பவருடைய கோட்பாடு என்ன வென்றால், பயிர்கள் நிலத்திலுள்ள நுண்ணிய மணலை உண்ணுகிறதென்பதேயாம். ஆகையால், அவர் நிலத்தைநன்றாய் உழுது பயிரிடத்தலைப்பட்டார். அப்படிச் செய்ததில் தக்கபலனைப் பெற்றதால், அந்தக் கோட்பாட்டை ஜனங்கள் வெகுவாய் சம்பலானார்கள் என்றாலும், பயிரானது உணவைக் கிரகிக்கும் முறையை, சென்ற நூற்றாண்டின் இடையில்தான் ஒருவாறு கண்டுபிடித்தார்கள். 18-ம் நூற்றாண்டினிறுதியில் வியவசாயமாய்ச் செய்து பார்க்கப்பட்ட பரிசோதனை ஆராய்ச்சிகளைத் திரட்டவும், பற்பல இடங்களிலுள்ள வியவசாயிகளது முறைகளின் நயத்தைப் பரிசோதிக்கவும், தொடங்கினார்கள். வெகுகாலத்துக்கு முன்னரே, வியவசாயிகள் ஒரே நிலத்தில் பயிர்செய்வதினால், வரவரப் பலன் குன்றிப்போவதை யறிந்து கொண்டபடியால், தொடர்ச்சியாய் இரண்டொருவருஷங்களுக்கு சாகுபடி செய்த பின் நிலத்தை தரிசுபோட்டு பின் உழுது பயிரிட்டு வந்தார்கள். மேலும் ஒருவகைப் பயிருக்கு நிலம் ஏற்றதாயிராவிடில், அதற்குத் தகுந்த மற்றொருபயிரை விளைவித்துக்கொள்ளக் கற்றுக்கொண்டார்கள். 'வியவசாய அபிவிருத்தி' விஷயமாய்ப் பெரிதும் உழைத்திருக்கிற ஆர்தர் எங் (Arther Young) என்பவர் கி. பி. 1770ஷு நார்போக்கு (Norfolk) மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து அம்மாகாணத்தில் ஒரு பயிருக்குப் பின் மற்றொருபயிரிடும் முறையின் பிரயோசனத்தைத் தெரிந்து கொண்டார். இம்முறைதான் நார்போக் முறையென்றும் நால்விதப் பயிர்முறை யென்றும் வழங்குவது (Four course system). இம்முறையில் நிலத்தின்செழிப்பு கெட்டுப் போகாததால், அது பெரிதும் சிலாகித்துப் பேசப்படுகின்றது. அம்முறைப்படி முதலில் கோதுமை பயிரானபின், டர்னிப் என்ற ஒருவகை கிழங்கை (turnips) பயிரிடுவார்கள்.

அதற்குப்பின் வாற்கோதுமை விளைச்சலாகும். கடைசியாக, கிளோவர் (Clover) பயிரிடுவார்கள். இம்முறையின் நயத்தை, மேற்கண்ட பரிசோதனையிலிருந்தும் தெரிந்துகொண்டார்கள். பின்பு சாஸ்திர ரீதியாய் இம்முறையின் நயம் தெரியவே, சிறந்த புது மாதிரிகளும் காட்டப்பட்டன. இம்முறையில் இன்னும் சில சீர்திருத்தங்களும் செய்திருக்கிறார்கள்.

By a Specialist

சுகாதார விளக்கம்

HYGIENE.

(பண்டித நடேச சாஸ்திரியார் எழுதியது.)

முதல் அத்தியாயம்

நிலம்

1. நிலம்.—பூமியின் மேற்புறமாகிய நிலத்திலேதான் மானுடஜன்ம மெடுத்த நாம் எல்லோரும் வசிக்கின்றோம். நாம் எத்தன்மையான நிலத்தின் மேல் வசிக்கின்றோமோ, அந்நிலத்தின் நிலைமையும் குணங்களும் நமது சரீர சௌக்கியத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

2. நிலத்தின் பாங்கு.—நிலத்தின் கண் உலோகங்களும், ஒஷதிவர்க்கங்களும், பிராணி வர்க்கங்களும், இவைகளின் கழிவுகளும், மடிந்திருக்கின்றன. இவ்விதக் கலப்புகள் கலந்த மண்ணின் இடையில் சிலவிடங்களில் வாயுவும் ஜலமும் காணப்படும். மண்ணிற் கலந்த வாயுவாலும்,மண்ணிற் கலந்த ஜலத்தாலும் விளையும் சுகாசுகங்களைப்பற்றி விசாரிப்போம்.

3. மண்ணிற் கலந்த வாயு.—சூரிய காந்தியாலும் வெப்பத்தாலும் மண்ணின் கீழ் நிற்கும் வாயு சலனப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. இவ்வித சலனம், மழையாலும் உண்டாகின்றது. அது எப்படியெனில், மழை பொழிந்து தண்ணீர் அதிகமாகிப் பூமியில் ஊறினதும், பூமியின் உள்ளடங்கியிருந்த வாயு, தான் நிற்க இட மில்லாமற் சரேலென்று வெளிப்படுகின்றது. நாம் ஒரு பள்ளத்தை மண் கொட்டித் தூர்த்து, அதின்மேல் ஒரு புது வீடு கட்டுவோமானல், மண் ஆழ்ந்து தளம் கெட்டிப்படுகிற வரையில், அவ்வீட்டில் பரிசுத்தமான ஆகாய மிருக்காது. தளம் கெட்டிப்படுகின்றதென்றால், அவ்வீட்டின் கீழ் அடங்கிய காற்றுக் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று போகின்றது என்பதாம். ஆகையால் நாம் வசிக்கும் வீட்டின் அடிக்காற்று மேற்கிளப்பாத வண்ணம், நாம் தரையை நன்றாகக் கெட்டிப் படுத்தலாவது தளம் போடலாவது நமது சரீர சௌக்கிய முறைகளில் முக்கியமானது. இதற்காகவே, சில நாடுகளில் வீடுகள் கட்டும்பொழுது மேல் தளத்தை கமான்களாக வளைத்து, வீட்டிற்கடியில் உண்டாகும் காற்றை, வீட்டில் சம்பந்தப்படாமல் அகற்றி விட்டு, அக்கமான்களின் மேற்புறத்தை வீட்டின் பிரதான தளமாகச் செய்து, வீடு கட்டுகின்றார்கள். சிமிட்டு (cement) முதலான சாதனங்களால் அழுத்தமான தளம்போட்டுக் கட்டப்படும் வீடுகள் எப்பொழுதும் நமக்கு தேக சௌக்கியத்தை விளைவிக்கும். இவ்விதமான கட்டிடங்களில் அடிக்காற்று மேற்கிளம்பாது. நாற்றங்களும் எளிதில் அலம்பி விடப்பட்டு அகற்றப்படும்.

4. மண்ணிற் கலந்த ஜலம்.—மண்ணிற் கலந்து நிற்கும் ஜலம், ஈரம் என்றும் கசிவு என்றும் இருவகைப்படும். மண்ணின் இடைவெளியில், கொஞ்சம் காற்றும் கொஞ்சம் நீரும் கலந்திருந்தால் அது ஈரம் எனப்படும். மண்ணின் கணங்கள் காற்று என்பதின்றி, நீரில் நெருங்கி மிதக்கும்பொழுது அது கசிவு எனப்படும்.

5. ஈரம்.—ஈரம் அதிகம் அல்லது குறைவு என்பது, மண்ணின் இயற்கையைப் பொறுத்திருக்கின்றது. சில மண்கள் நீரை அதிகமாகத் தமக்குள் இழுத்துக் கொண்டும், அந் நீரைக் கீழ் நோக்கிச் செல்லும்படி செய்து கொண்டுமிருக்கின்றன. சில மண்களில், நீர் இவ்வாறு கீழ் நோக்கிச் செல்ல, வல்லமையில்லாமலிருக்கின்றது. ஈரம், மண்ணின் குணத்தைச் சார்ந்தது. அக்குணம், அபேத்யம் (Impenetrable) பேத்யம் (Penetrable) என்று இருவகை. தண்ணீர் எளிதில் நுழையக்கூடாத அல்லது இறங்க முடியாத மண், அபேத்யம் எனப்படுகின்றது. களிமண் இவ்வகையைச் சேர்ந்தது. தண்ணீர் எளிதில் இறங்கக் கூடிய மண், பேத்யம் எனப்படும். மணற்பாய்ந்த மண் இவ்வினத்தைச் சேர்ந்தது. மழை பொழிந்து, நீர் பூமியில் சுவருகின்றது. அப்பொழுதும் ஈரம் என்பது உண்டாகின்றது. இவ்வீரம் தரை

அபேத்யம் அல்லது பேத்யம் என்பதைச் சார்ந்திருப்பதுடன், பூமி பள்ளமா மேடா என்பதையும் சார்ந்திருக்கின்றது. இவைகளின்றி, மழை வெயிற்கால மழையா, அல்லது மழை காலத்து மழையா என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். இவைகள் எல்லாவற்றையும் நாம் யோசிக்கும்பொழுது, மழை நீர், வேகமாக பூமியில் சுவருவதும் அல்லது மெதுவாக உள்ளடங்குவதும், அவ்வித காரணங்களால் ஈரம் உண்டாவதும், நமக்கு விளங்கும். ஈரம் மழையால் மாத்திரமல்லாமல் கசிவாலும் உண்டாகின்றது. கசிவுண்டாகு மிடத்திலிருந்து வெளிக்கிளம்பும் நீர் ஈரத்தை உண்டாக்குகின்றது.

6. கசிவு.—கசியும் நீர் பூமிக்குள் பல விடங்களில் வெவ்வேறு ஆழங்களில் எப்பொழுது மிருந்துகொண்டே யிருக்கின்றது. அவ்விடங்களினின்று கசிவு நீர் வெளிக்கிளம்புவதும் கிளம்பாததும், தரை அபேத்யமா அல்லது பேத்யமா என்பதையும், பூமி பள்ளமா மேடா என்பதையும் சம்பந்தித் திருக்கின்றது. கசிவு நீரை ஆகர்ஷிக்கும் சக்தி மரங்களின் வேர்களுக் கிருக்கின்றது. இதை உத்தேசித்தே சதுப்பு நிலங்களில், சவுக்கு, கர்ப்பூரமரம் முதலிய மரங்களைப் பயிரிடுகின்றார்கள். கசிவு அதிகம் அல்லது குறைவு என்ற மாறுபாடுகள் மழை அதிகமாகப் பொழிவது அல்லது பொழியாதது, கசிவு நிலங்கள் சமுத்திரத்திற்கோ அல்லது நதிக்கோ தூரத்தில் அல்லது சமீபத்தில் இருப்பது, இக்காரணங்களைச் சம்பந்தப் பட்டிருக்கின்றன.

7. ஈரத்தால் விளையும் நோய்கள்:—காய்ந்த தரையில் வசிப்பது எப்பொழுதும் நமது தேகத்துக்கு சௌக்கியத்தை விளைவிக்கும். ஈரத்தரையில் வசித்தல் நமது சுவாசாசயத்தைக் (lungs) கெடுத்து, காசம் முதலிய ரோகங்களை நமக்கு உண்டாக்குகின்றது. கபரோகம், சிலேஷ்ம ரோகம், சந்நிவாதநோய், முறைசுரம், விஷசுரம், வயிற்றில்கட்டி, விஷபேதி, இவ்விதமான நோய்கள், ஈரத்தரையில் வசிப்பதால் உண்டாகின்றன. இவைகளுள் விஷபேதி என்பது, எப்பொழுதும் ஈர நிலத்தினிடத்திலேயே உண்டாகின்றது.

8. கசிவாலுண்டாகும் வியாதிகள்:—கசிவு நிலங்களுக்குச் சமீபத்தில் வசிப்பதால் மேற்கூறிய வியாதிகள் உண்டாவதுடன், சீதபேதி சின்னம்மை முதலிய வியாதிகளும் விளைகின்றன.

9. நிலத்தின் அங்கங்கள்:—நாம் வசிக்கும் இடம் மலைநாடா, சமதரையா, மலைநாடாயிருந்தால் மலையின் உயரமென்ன, வடிவமென்ன, சமதரையா யிருந்தால் மேடான தரையா பள்ளத்தாக்கா, அத்தரைக்கு நீர் பாயும் கால்கள் யாவை, நீர் வடியும் கால்கள் யாவை என்று நாம் எப்பொழுதும் யோசித்துப்பார்க்கவேண்டும். ஏனெனில், இவைகள் ஒவ்வொன்றும் நமது தேக சௌக்கியத்தை சம்பந்தித் திருக்கின்றது.

மலையின் உன்னத ஸ்தலம் எப்பொழுதும் சௌக்கியம். சமதரையில் கொஞ்சம் மேட்டுப்பாங்கான தரை, எப்பொழுதும் தேகாரோக்கியம். தரை உலருவதை மர நிழல் தடுக்கின்றபடியால், ஈர நிலங்களில் தோட்ட மதிகமாகவிருந்தால், அது சௌக்கியமல்ல. ஈரமில்லாத விடங்களிலும் விருக்ஷங்கள் அதிகமாய் அடர்ந்திருப்பது காற்றோட்டத்தைத் தடுக்கின்றபடியால், அவ்வாறு மரங்களை அடரவிடாமல் நாம் கழித்துக்கொண்டிருக்கவேண்டும். மலைப் பிரதேசங்களில் நாம் வாசம் பண்ணும்பொழுது நமக்கு நான்கு பக்கங்களிலும் மலைகள் ஓங்கி நிற்கும் இடங்கள் நமக்கு சௌக்கிய முள்ளவைகளல்ல; அவ்விடங்களில் காற்றோட்டமிருக்கமாட்டாது. அங்குள்ள அரணியங்களில் உதிரும் சருகுகள், அழுகிய துர்க்கந்தமும் விஷமும் நிரம்பிய காற்று சலனமின்றி யிருக்குமாகையால், அவ்விடங்கள், தேகசௌக்கியத்துக்கு ஒவ்வாதவைகள். மலையடிவாரங்களும் நிலமட்டத்துக்குக் கீழ்ப்பட்ட பள்ளத்தாக்குகளும் அவ்வாறே.

10. நிலத்தின் நிறம். கரிசல் மண்ணில் சூரியனுடைய உஷ்ணம் அதிகமாகப் பிடிக்கின்றது. அக்கரிசல் மணற்றரையாக விருந்தால், அங்குண்டாகும் உஷ்ணத்திற்கு அளவேயில்லை.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு.

முதல் ஸருக்கம்

உமாதேவி உத்பவம்

(1.) வடதிசையில்தேவரூபியாய் இமவான் என்று பெயருள்ள மலையரசர் விளங்குகின்றார்; அவர் கீழ் சமுத்திரம், மேல் சமுத்திரம், இவ்விரு சமுத்திரங்களிலும் எட்டி ஓங்கி நிற்பதால், இப்பூதலத்துக்கே ஓர் அளவுகோல்போலக் காணப்படுகின்றார்.

இமயமலை வருணனை

(2.) முன்னொருகாலத்தில், பூமாதேவி பசுவுருவங் கொண்டபொழுது, அவ்வுருவங்கொண்ட இரகசியத்தைப் பிருது மகாராஜன் எல்லா மலைகளிடமும் தெரிவிக்க, மற்றை மலைகளெல்லாம் இவ்விமவானை அப்பசுவின் கன்றாகச்செய்து, பால்கறப்பதில் மிக்க சமர்த்தனான மேருவைக்கொண்டு அப்பசுவைக் கறந்து, * மிகவும் ஒளிபொருந்திய ரத்தினங்களையும் உயர்ந்த மூலிகைகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

(3) கணக்கிட முடியாத எல்லாவித உயர்ந்த வஸ்துக்களுக்கெல்லாம் ஆதாரபூதமாயிருக்கும் இவ்விமயமலையின் மகிமையானது, அதனிடமிருக்கும் பனி என்பதனால், ஏதோ சொற்பம் குறைவுபடுவதாக நாம் கருதக்கூடாது; ஏனெனில் அநேக நற்குணங்களுடன் ஒரு தோஷம் கூடியிருப்பினும், அத்தோஷம் சந்திரபகவானுடைய கிரணங்களுக்குள் அவருடைய மாசு மறைவது போல் மறைந்து விடுமன்றோ?

(4) அம்மலையின் சிகரங்களில் ஏராளமாயுள்ள காவிக்கற்களின் நிறம், மேகங்களின்மேல்படிவதனால் அந்திச் செவ்வானம் உண்டாயிற்று என்று மருண்டு அம்மலையிலிருக்கும் அப்சர மடந்தைகள் காலமில்லாக் காலத்திலும் தங்கள் மேனிகளை நகைகளால் அலங்கரித்துக் கொள்ளுகின்றார்கள்.

(5) அம்மலையில் வசிக்கும் ஸித்தர்கள் அதின் சிகரங்களுக்குக் கீழ் அடர்ந்து சஞ்சரிக்கும் மேகமண்டலத்துக்குள் நிழலாலும் மழையாலும் உண்டாகும் சுகத்தை அநுபவித்துவிட்டு, மழை அதிகமாய்ப் பெய்ததன் குளிர்ச்சி சகிக்க முடியாமற்போகும் பொழுதெல்லாம், அம் மேகமண்டலத்துக்கு மேலாக ஓங்கி வெயிற்காய்ந்து விளங்கும் சிகரங்களை நாடிச் செல்லுகின்றார்கள்.

(6) யானைகளைக் கொன்றுசென்ற சிங்கங்களின் இரத்தச் சுவடுகளைப் பனி பெய்து அழித்த காரணத்தால், அவைகளைப் பற்றி வேடர்கள் அச்சிங்கங்களைத் தேட முடியாவிடினும், அச்சிங்கங்களின் நகக்கண்களினின்றும் உதிர்ந்திருக்கின்ற யானைகளுடைய மஸ்தக நல்முத்துக்களால், அம்மலையில் அச்சிங்கங்கள் போனவழியைக் கண்டுபிடித்துக் கொள்ளுகின்றார்கள்.

(7) அம்மலையில் வசிக்கும் வித்யாதர ஜாதியைச் சேர்ந்த கட்டழகிகள் தங்கள் கணவர்களுக்கு அன்பான கடிதங்கள் அனுப்பவேண்டியிருக்கும்பொழுதெல்லாம், அம்மலையில் உண்டாகும் பூர்ஜபத்திரம் என்ற இலைகளில் காவிக்குழம்பு மையால் வயது சென்ற யானையின் துதிக்கையின்மேல் காணப்படும் பத்மவிந்துக்கள்போல் அழகான எழுத்துக்களால் காகிதம் எழுதி அனுப்புவார்கள்.

(8) இம்மலையில் வசிக்கும் கின்னரர்கள் இசை பாடும்பொழுதெல்லாம் இம்மலையின் குகையாகிற முகத்தினின்று வெளிக்கிளம்பும் காற்றானது வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களை நிரப்பிக்கொண்டு அக்கின்னரர்கள் பாட்டுக்கு புல்லாங்குழலொத்துக் கொடுப்பதுபோலும் காணப்படுகின்றது.

(9) இம்மலையில் யானைகள் தங்கள் கபோலங்களில் காணும் தினவைப் போக்கிக்கொள்ள சால (ஆச்சா) மரங்களில் உறையும் பொழுதெல்லாம் அம்மரங்களினின்றும் பெருகும் பால் இம்மலையின் சாரல்களை பரிமளவாஸனையால் வாஸிக்கும்படி செய்கின்றது.

---

* பசுவுக்குத் தன் கன்றினிடம் அதிக ஆசையாகையால், கன்றாய் நின்று பால்குடித்த ஹிமவானுக்கு மற்றை மலைகளுக்குக் கொடுத்த இரத்தினங்களையும் மூலிகைகளையும்விடச் சிரேஷ்டமான இரத்தினங்களையும் மூலிகைகளையும் பால் ரூபமாகக் கொடுத்திருக்கவேண்டும் என்பது கவியின் கருத்து. அஃது உண்மையே. மற்றை மலைகளைக்காட்டிலும் இமயமலையிற்றான் இப்பொழுதும் எல்லாவித உயர்ந்த ரத்தினங்களும் மூலிகைகளும் கிடைக்கின்றனவென்பது உலகப்பிரசித்தம்.

(10) இவ்விமயமலையில் குகைகளாகின்ற வீடுகளுக்கு முன்பாக வளர்ந்திருக்கும் சோதிக்கொடிகள் இரவுதோறும் விளக்குகள்போல் பிரகாசிக்கின்ற காரணத்தால், தங்கள்நாயகிகளுடன் சஞ்சரிக்கின்ற வேடர்களுக்கு, அவர்களோடு உல்லாஸமாக அக்குகைளிலிருக்க அச்சோதிக்கொடிகள் அவ்விரவு நேரங்களில் எண்ணெய் ஊற்றுமலெரியும் விளக்குகளாக விளங்குகின்றன.

(11) அம்மலையில் கல்லாக உறைந்திருக்கும் பனியானது குதிரை முகம் போன்ற முகங்களை உடைய கின்னரஸ்திரீகளின் நகங்களையும் குதிகால்களையும் அவர்கள் வழிநடக்கும்பொழுதெல்லாம் வருத்திய போதிலும், அவர்களுக்கு இயற்கையாகவே நிதம்பங்களும் ஸ்தனங்களும் பெரியவைகளாகையால் மெள்ள நடக்கவேண்டியிருத்தலால் அவர்கள் அவ்வருத்தத்தைச் சகித்துக்கொள்ளுகிறார்கள்.

(12) சூரியபகவானைக் கண்டு பயந்து ஓடி வந்து ஒளிந்திருக்கும் இருள் திரளையே, இவ்விமயமலை தனது குகைக்குள் காபாற்றி வைத்திருப்பது போலக் காண்கின்றது. அற்பனையும் அவன் சரணமடைந்த பொழுது அவன் பகைவனிடம் ஒப்புவிக்காமல் நம்மைச் சார்ந்தவன் என்று காப்பாற்றுவது சான்றோர்களின் குணமன்றோ?

(13) இம்மலையில் சவரிமான்கள் அங்கு மிங்கும் தங்கள் வால்களைத் தூக்கி தூக்கி உதரும்பொழுதெல்லாம் சந்திரனுடைய காந்திக்கொப்பானபிரகாசத்தை உண்டாக்கிக்கொண்டு, சஞ்சரிக்கின்றமையால் அவைகள் இவ்விமயமலைக்கு, மலைகளுக்கு மன்னவன் என்ற பெயரை உண்மைப்படுத்த சாமரை வீசுவன்போல் காணப்படுகின்றனவாம்.

(14) இம்மலையில் கின்னரமடந்தைகள் எதாவது ஒரு சமயத்தில் தங்கள் ஆடைகளை இழந்து வெட்கிநிற்கும் பொழுதெல்லாம் அவர்களிருக்கும் குகைகளின் வாயிலை மேகங்கள் மூடுகின்றமையால், அவைகள் அவர்களுக்கு ஒரு திரையை உண்டாக்கிக் கொடுப்பன போலும் காணப்படுகின்றன.

(15) இம்மலையில் வேடர்கள் மிருகங்களை வேட்டையாடி அயர்ந்திருக்கும் பொழுதெல்லாம் கங்கை அருவிகளினின்றும் நீர்த்திவலைகளைத் தாங்கியும் தேவதாரு மரத்தின்மேல் தவழ்ந்தும் வீசும் சுகமான காற்றானது, அவர்கள் தங்கள் மேனிகளில் கட்டிக்கொண்டிருக்கும் மயில் தோகைகளைச் அசைத்து அவர்களைச் சுகப்படுத்தி வைக்கின்றதன்றோ? (*)

(16) இம்மலையின் உச்சியில் ஸப்தரிஷிகளால் பறிக்கப்பட்டு மிகுந்து நிற்கும் தாமரை மலர்களை அச்சப்தரிஷி மண்டலத்தின் கீழே விளங்கும் சூரிய பகவான் அம்மலர்கள் உண்டாகும் ஓடைகளின் மீது மேல்நோக்கிப்போகும் தனது கிரணங்களை விழச்செய்து மலரச்செய்கின்றான். (‖)

(17) யாகத்துக்குச் சாதனமான சோமலதை முதலான வஸ்துக்களுக்கு இவ்விமயமலை காரணமாயிருப்பதையும், (†) பூமியைத் தாக்கிபிடித்துக்கொண்டிருக்கும் பலம் இதனிடமிருப்பதையும், பிரமதேவர் கண்டு, இம்மலைக்கு யாகத்தில் எல்லாரும் ஒருபாகம் அளிக்க வேண்டும் என்ற திட்டத்தையும், இம்மலை மலைகளுக்கெல்லாம் மன்னவன், என்ற பட்டத்தையும் தாமாகவே கொடுத்தார். (இன்னும் வரும்)

'புஷ்பங்களுள் ராஜா தாமரை. ரோஜாவும் அல்லியும் ராணிகள். ரோஜாவின் பளபளப்பு தாமரைக்கில்லை. தாமரையின் கம்பீரம் ரோஜாவுக் கில்லை. தாமரையின் அழகு, புருஷனுடைய அழகு; ரோஜாவின் அழகு, ஸ்தீரீயின் அழகு. தாமரை, பூஜாயோக்கியம் ரோஜா பூஷணயோக்கியம். யானை, கருடன் தாமரை ஒருவர்க்கம். தாமரையின் குணம் கல்யாண குணம். ரோஜாவின் குணம் நாயகி நாயகரது ஸரஸ ஸல்லாபகுணம். தாமரை பரிசுத்தத்துக்கும் ரோஜா அழகுக்கும் விசேஷம். தாமரையின் வாஸனை புருஷனுடைய வாசகாலம், ரோஜாவின் வாஸனை ஸ்திரீயின் வாசகாலம் ரோஜாவும் அல்லியும் முறையே உத்தானபாதருடைய மனைவிமார் சுனீசி சுருசியைப் போல.'

(*) ஒரு மலையின் உச்சியிலிருந்து மற்றொரு மலையின் உச்சிக்குப் பட்சிகள் போல் பறந்துபோக இமாலயத்தில் வேடர்கள் தங்கள் இருவிலாப்பக்கங்களிலும் மயில் தோகைகளைக் கட்டிக்கொள்ளுகின்றார்கள் என்பது லோகப்பிரஸித்தம்.

(‖) சூரிய மண்டலத்துக்கு மேலாக இம்மலை ஓங்கி நிற்கின்றதென்பது தாத்பரியம்.

(†) ஒரு தேருக்கு அதனடியிலிருந்து உச்சி வரையில் உள்ளாக அமைக்கப்பட்டிருக்கும் உள்ளாணி அத்தேரின் பாகங்களை ஒன்றாகச் சேர்த்துப் பிடிக்க சாதகமாவதுபோல், மலையும் இப்பூமியின் உள்ளாக அமைக்கப்பட்டு பூமியை இழுத்துப் பிடித்துக்கொண்டு முனை மட்டில் மலை உருவாய் நமது கண்களுக்குக் காணும் உள்ளாணிபோல் விளங்குகிறது என்பதும் ஓர் வித சித்தாந்தம்.

இந்துலேகை

(ஒரு மலயாள நாவல்)

முதல் அத்தியாயம்.

கதாமுகம்.

"இதென்ன மாதவா? என் இப்படிபதட்டமாய்ப் பேசினை? சே, இப்படி கூடச் செய்யலாமோ? காரணவன் தன் இஷ்டம் போலத்தான் நடப்பார்; நாம் அவருக்கு அடங்கித்தான் நடக்க வேண்டும். என்னவென்றாலும் உனக்கு நாக்குப் பதட்டம் தான்" என்றான் சாத்தர் மேனவன்.

"ஒருக்காலுமில்லை" என்றான் மாதவன். "அப்படிப்பட்ட பக்ஷபாதம் கூடவே கூடாது. அவன் நியாயமாய்ச் செய்யவேண்டியதை செய்யாமற் போனால் போகட்டும். நானே சின்னனை அழைத்துக்கொண்டுபோய்ப் படிப்பு சொல்லிவைக்கிறேன்"

இதனிடையில் கும்மிணியம்மாள் குறுக்கிட்டு— "வேண்டாம் வேண்டாம், என் செல்வமே! இதுவரையில் நான் சின்னனை விட்டிருந்ததேயில்லை. வேணுமானால் நீ சாத்தரையாவது கோபாலனையாவது அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்குப் படிப்புச் சொல்லிவை. எப்படியும் உன்மேல் கார்ணவனுக்கு அதிருப்தி உண்டாயிருக்கிறது. எங்கள் மேல் அவர் கோபித்துக் கொள்வது சாதாரணம். ஆனால் உன்னைப்பற்றி நல்ல அபிப்பிராயமே கொண்டிருந்தார்" என்றாள்.

"அதெல்லாம் சரிதான்" என்று சுறுக்கென பதிலுரைத்தான் மாதவன். "ஆனால் கோபாலனையும் எல்லோருக்கும் மூத்தவனாகிய சாத்தரையும் இப்பொழுது நான் அழைத்துக்கொண்டுபோய்ப் படிக்க வைத்தால் வெகு நேர்த்தியா யிருக்குமல்லவா?"

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு நிற்கையில், ஒரு வேலைக்காரன் ஓடிவந்து மாதவனை அவன் அம்மானாகிய சங்கரமேனவன் அழைப்பதாகச் சொன்னான். உடனே மாதவன் தன் அம்மானிருக்கும் அறைக்குட் சென்றான். இந்த சமயத்தில் நாம் இந்தக்கதையை இம்மட்டிலேயே நிறுத்தி, மாதவனுடைய கல்வி, செல்வம், அந்தஸ்து முதலிய விவரங்களை விசாரிப்போம்.

மாதவன் அபாரசக்தியும் அழகிய ரூபமும் வாய்ந்த யௌவனன். அவன் இங்கிலீஷ் வாசிக்கத் தொடங்கினது முதல் பி. எ. பரிக்ஷையில் தேறினவரையிலும், எந்தெந்த ஸ்கூல்களில் படித்தானோ அவற்றிலெல்லாம் அவன் தவறாமல் முதன்மையாய் நின்று வெற்றிபெற்று விளங்கிய புகழே, அவனுடைய அருமையான சக்திசாமர்த்தியங்களை வியக்தமாயும் சம்பூர்ணமாயும் அறிவித்தது. அவன் எப்படிப்பட்ட பரிக்ஷையிலும் எப்பொழுதும் தவறினதில்லை. எப். எ. பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறினான். பி. எ. பரிக்ஷையில் ஸம்ஸ்கிருதத்தைத் தனக்கிஷ்டமான இரண்டாம் பாஷையாக எடுத்துக்கொண்டு படித்தான். ஸம்ஸ்கிருத இலக்கியத்தில் அவனுக்கிருந்த நுண்ணிய அறிவு அபாரம். பி. எல். பரிக்ஷையிலும் முதல்வகுப்பில் எல்லாருக்கும் முதன்மையாகத் தேறினான். இவையன்றி ஸ்கூல் பரிக்ஷைகள் பலவற்றிலும் அவன்மேலாக விளங்கி வித்யாபிவிருத்திக்காக ஏற்பட்டிருந்த பல பரிசுகளையும் ஸ்காலர்ஷிப்புகளென்ற வித்யார்த்தி சம்பளங்களையும் சம்பாதித்து, யுக்தியிதும் புத்தியிலும் இவனுக்கு நிகர் இவனுடன் படித்த பிள்ளைகளில் ஒருவருமில்லையென்று இவன் உபாத்தியாயர்களும் புகழ்ந்து மெச்சும்படி உயர்ந்து நின்றான்.

அவனது ரூபவிசேஷத்தைப் பற்றியோ வெனில், இப்படிப்பட்ட அபூர்வமும் அத்புதமுமான புத்திக்கு உறைவிடமா யிருக்கவேண்டி, அதற்கு அநுரூபமாய்த்தான் படைக்கப்பட்டதோ மாதவனுடைய மேனி யென்று அவனைக் கண்டு பரிசயமானவர்களுக்கெல்லாம் தோன்றும். ஒருவனுடைய குணதோஷங்களை யாராயுங்கால் அவனது வடிவழகை வர்ணிப்பது சாதாரணமாக அநாவசியமாகையால், அவனது புத்தி, சாமர்த்தியம், கல்வி, ஆண்மை, விநயம், குணம் ஆகிய இவற்றை எடுத்துச்சொல்வதே போதுமானது. ஆகிலும் மாதவனது வடிவழகைப்பற்றி இரண்டொரு வசனமாகிலும் சொல்லாமலிருப்பது இக்கதையின் சிறப்புக்குக் குறையாகு மென்று இதைப் படிக்கும் எமது நண்பர்களுக்குத் தோன்றக் கூடுமாதலால், அவ்விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாய்ச் சிறிது கூறுகின்றேன்.

அவனது தேகம் தங்கநிறமாயிருந்தது. தினந்தோறும் செய்துவந்த சரீரப்பயிற்சிகளால் இந்த யௌவன காலத்தில் மாதவனுடைய மேனி மிக்க மநோஹரமாய் விளங்கியது. வேண்டுமளவுக்கு மிஞ்சித் தடிப் [illegible] ஒற்றைநாடியா யிராமலும் காணப்

பட்ட மாதவனது கைகளும் மார்பும் கால்களும் தங்கத்தால் வார்த்து வைத்தவைபோல் விளங்கின. குடுமியை யவிழ்த்துவிட்டால், அவனது நீண்ட கூந்தல், முழங்கால் வரையும் வந்து தொங்கும். அவனது முக காந்தியும் பௌருஷ சம்பத்தும் ஒவ்வொரு அவயவங்களுக்கும் தனித்தனியே யுள்ள சௌந்தர்யமும் அவையனைத்துக்கும் அந்யோந்யமுள்ள பொருத்தமும், அவ்வளவேன், அவனுடைய முகவிலாஸமும் மேனியின் எழிலும், அவை அவ்வளவும் ஒன்று சேர்ந்து விளங்கிய காட்சியே காட்சி! மாதவனுக்குப் பரிச்சயமாயுள்ள சகல ஐரோப்பியரும் முதல்தடவை பார்த்தபொழுதே, அவனிடத்தில் பிரியங்கொண்டு அதுமுதல் எப்போதும் அவனது நண்பர்களாகவேயிருந்து வந்தனர்.

மாதவன் இவ்வாறு யௌவனாரம்பத்தில், தன் சுந்தர மேனியையும் சாமர்த்தியச் செயல்களையும் சர்வஜனங்களும் கொண்டாடுவதைக் கண்டு, அது தனக்கொரு பெரும்பூஷணமெனப் பெருமை பாராட்டினான். அந்நல்லபிப்பிராயத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தினாலோ, அல்லது அவனுக்கே இயற்கையாயுள்ள நல்ல தன்மையினாலோ, மற்றும் எதனாலோ அறியோம், மாதவன் ஸாதாரண வாலிபர்கள் தம் பதினெட்டாம் பிராயமுதல் கிரமமாய்க் கல்யாணம்செய்துகொண்டு கிருகஸ்தராகும் வரையிலுமுள்ள மத்தியகாலத்தில் துரதிருஷ்ட வசத்தால் சித்த சாபல்யங்கொண்டு, சிற்சில சமயங்களில் செய்யும் துர்வியாபாரங்களிலும் சேஷ்டைகளிலும் சிறிதும் பிரவேசித்தவனல்லனென்று நிச்சயமாய்ச் சொல்வோம். ஆகையால் தான், இயற்கையாயுள்ள தேக காந்தியும், திடகாத்திரமும் தன்னிகரில்லா ஆண்மையும், மாதவனுக்குப் பூர்ண யௌவனம் பிராப்தமானபோது சிறிதும் குன்றாமல் விளங்கின.

மாதவனுக்கு இங்கிலீஷில் நல்ல பாண்டித்தியமுண்டாயிருந்ததென்பது இதுவரையில் சொல்லி வந்தவற்றாலேயே இனிது விளங்கும். அதோடு, லான் டேர்னிஸ், கிரிக்கேட் முதலியஇங்கிலிஷ்தேசப்பயிற்சி விநோதங்களிலும் மாதவன் மிக்க நிபுணனாயிருந்தான். வேட்டையாடுவதில் அவனுக்கு இளமை முதற்கொண்டே பழக்கமுண்டு. ஒருவேளை இது அவன் பிதாவாகிய கோவிந்த பணிக்கரிடத்திலிருந்து பெற்ற ஒரு பழக்கமாயிருக்கலாம். கோவிந்த பணிக்கர் வேட்டையில் அதிகப்பித்துக்கொண்டவர்.

அதுபோலவே மாதவனும் அதிலேயே மோகங்கொண்டு மூழ்கியிருப்பவனென்று சொல்லலாம். அவன் வேட்டைக்காகப் புறப்படும்போது, இரண்டு மூன்று விதமான சிறந்த துப்பாக்கிகளும் இரண்டு மூன்று 'பிஸ்தோல்'களும் 'ரிவால்வர்'களும் கொண்டுபோவான். விநோத சுகங்களில் அவனுக்கிருந்த பற்றானது, அதற்கு முற்றும் வேறான ரீதியில் மாறாதிருந்த வரையிலும் அவன் வேட்டைக்குச் செல்வதிலேயே விசேஷமாய் விநோத சுகமனுபவிப்பவனாயிருந்தான்.

இனி நம் கதையின் தொடர்ச்சியைச் சொல்லத் தொடங்குவோம்: வேலைக்காரன் வந்து கூப்பிட்டவுடன், மாதவன் தன் அம்மான் எதிரில் போய் நின்றான். உடனே சங்கரமேனவன் அவனைப் பார்த்து, "மாதவா, இது என்ன கதை, என்காது வரையிலும் எட்டினது? வயோதிகரான காரணவரோடு நீ சுத்த அதிகப்பிரசங்கித்தனமாய்ப் பேசினாயாமே? அவர் எவ்வளவோ பணம் செலவழித்து உன்னை இங்கிலீஷ் படிப்பித்ததன் பலனோ இது" என்று கேட்டார்.

மாதவன், "அம்மான்கூட இப்படிப் பேசத்தொடங்கினால், அது எங்கள் துர்ப்பாக்கியமே. இப்படிப்பட்ட வியவகாரங்கள் வரும்போது, என் மனதில் உள்ளதை உள்ளபடியே சொல்லித்தான் ஆகவேண்டும். பயப்பட்டுக்கொண்டு வாய்மூடியாயிருக்கமாட்டேன். பெரிய மாமா சரீரகஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் ஒரு காசாகிலும் எனக்குக் கொடுக்கும்படி நான் ஒருபோதும் கேட்கவில்லை. நான் சொன்னதெல்லாம் கூடி, நம் பெரியோர்கள் நமது பிரயோஜனத்துக்கும் யோக க்ஷேமத்துக்குமென்று சம்பாதித்து வைத்ததும், இப்போது பெரிய மாமா வசத்திலிருப்பதுமான திரவியத்தை நமது நியாயமான அவசிய காரியங்களுக்காக செலவழிக்க வேண்டுமென்பதேயன்றி வேறில்லை. கும்மிணி அம்மாவும் அவள்பிள்ளை குட்டிகளும் இங்கே வேலைக்காரர் ஒப்பந்தம் உழைக்கிறார்கள். அவர்களை, யேன் பெரிய மாமா இவ்வளவு சிரத்தையாய்த் தள்ளிக் கழிக்கவேணும்? அவளுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் இங்கிலீஷ்படிப்பு சொல்லிவைக்கவேயில்லை. கல்யாணிக் குட்டிக்கும் தக்கமாதிரியான படிப்பு ஒன்றுங் காணோம். இதெல்லாம் பெரிய மாமாவின் கொடுமைதானே? அவர் மனம் போனபடியே இப்படி எங்களை வருத்துவதைக் கேட்பார் யாருமில்லையோ? இன்னும் அந்தப்பையன் சின்னான் எருமைக்கிடாபோல்.

வளரட்டுமென் றிருக்கிறரேயொழிய அவனைப் படிப்பிக்க வேண்டுமென்கிற யோசனையே அவருக்கில்லை. இதற்கு நான் ஒருபோதும் சம்மதியேன். நானே அவனை அழைத்துக்கொண்டுபோய்ப் படிக்க வைக்கிறேன்.''

சங்கரமேனவன்:—''படிப்பா! படிப்பா! விசேஷந்தான்! நீ எதைக்கொண்டு அவனைப் படிக்கவைப்பாயப்பா? உனக்கு வருவது மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய்தானே? அதைக்கொண்டு அவனை யெப்படி படிக்கவைப்பாய்? பெரிய மாமாவுக்குக் கோபம் வரும்படி பண்ணுதே. அதனால் பின்னால் வரும் கஷ்டம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. உடனே அவர் காலில் போய் விழுந்து, மன்னிக்கும்படி கேட்டுக்கொள்.''

பெரிய மாமாவுக்குக் கோபம் வந்தால், பின்வரும் கஷ்டம் இவ்வளவென்று சொல்லிமுடியாதென்று சங்கரமேனவன் சொன்னதைக் கேட்டவுடன், மாதவனுக்கு இந்துலேகையின் ஞாபகம் உண்டாக, அந்த க்ஷணமே அவனுடைய முகத்தோற்றம் பிரத்யக்ஷமாய் மாறுபட்டது. ஆயினும் அவன் அதை நொடியில் அடக்கிக்கொண்டு, அந்த அறையில் அப்படியும் இப்படியும் நடந்து, சிறிது மந்தஹாஸத்துடன் மறுபடியும் மொழியலுற்றான்.

மாதவன்:—'அவருக்கு நான் எப்படிக் கோபம் வரும்படி பண்ணக்கூடும்? நான் நியாயமாய்ப் பேசினால் அவருக்கேன் கோபம் வரவேண்டும்? காரணமில்லாமல் அவர் என்மேல் கோபித்துக்கொண்டால் அதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்.'

சங்கர:—'சீ, மரியாதைக் குறைவாய்ப் பேசாதே.'

மாதவன்:—'என்ன மரியாதைக் குறைவு? அந்த வார்த்தையின் அர்த்தங்கூட எனக்குத் தெரியாதே.'

சங்கர:—'அது தெரியாததென்பதுதானே அங்கிருக்கும் விஷமமெல்லாம். அப்பு! நீ எதோ கொஞ்சம் இங்கிலீஷ் படித்து சமர்த்தனாய் விட்டதினாலேயே, நமது குடும்ப சம்பிரதாயங்களையும் ஆசாரங்களையும் தலைகீழாய் மாற்றி விடலாமென்று நினைக்கிறையோ? நீ சாப்பிட்டாயிற்றா, குழந்தாய்?'

மாதவன்:—இன்னும் இல்லை, மாமா. என் மனது அதிகமாய்க் கலங்கியிருக்கிறது. அம்மா பால் கஞ்சி எடுத்துக்கொண்டு வருவதை வழியில் பார்த்தேன்;

[அப்பொழுது பார்வதி அம்மாள் பால் கஞ்சியை ஒரு வெள்ளிக்கிண்ணத்தில் எடுத்துக்கொண்டுவந்து சேர்ந்தாள்.]

சங்கர:—'பார்வதீ! பையன் சொன்னதை யெல்லாம் கேட்டையோ இல்லையோ?'

பார்வதி:—'ஆஹா கேட்டேன். சத்தமாய் நன்னாயில்லை.'

மாதவன்.—''பால் கஞ்சியை இப்படிக் கொடு'' என்று அதை வாங்கி நின்றவிடத்திலேயே நின்றுகொண்டு இரண்டுவாய் குடித்துவிட்டுப் புன்சிரிப்போடு தாயாரின் முகத்தைப் பார்த்து ''அம்மா, நீ கூடவா என்மேல் விரோதமாயிருக்கிறாய்?'' என்றான்.

பார்வதி:—பின் என்ன? அதில் என்ன சந்தேகம்? பெரியவருக்கும் மாமாவுக்கும் எது இஷ்டமில்லையோ, அது எனக்கும் இஷ்டமில்லை. அதிருக்கட்டும், இந்த கஞ்சியைக் குடி; அப்புறம் பேசலாம். இப்பொழுதே உச்சிக்காலமாய் விட்டது. இந்த குடுமி ஏன் இவ்வளவு அலங்கோலமாய் அலைகிறது? இப்படி வா நான் கட்டிமுடிக்கிறேன். குடுமி யெல்லாம் அவிழ்ந்து தொங்குகிறதே.

மாதவன்:—அம்மா, சின்னனுக்கு இங்கிலீஷ் சொல்லிவைக்க வேண்டியது அவசியமோ இல்லையோ சொல்லு.

பார்வதி:—பையா, அது உன் பெரிய மாமன் தீர்மானிக்கவேண்டிய சங்கதி. அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. உனக்குப் படிப்புசொல்லி வைத்தவர் பெரிய மாமா தானே. அவனுக்கும் அவர் சொல்லித்தான் வைப்பர்''

மாதவன்:—பெரிய மாமா சொல்லிவைக்காமல் போனாலோ?

பார்வதி:—அவன் படிக்க வேண்டாம்.

மாதவன்:—அதற்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

அதைக்கேட்ட பார்வதியம்மாள், ''கிண்ணத்தை இப்படி கொடு, நான் போகவேணும். சாப்பிடுவதற்கு சீக்கிரம் வா'' என்று சொல்லி வேறொன்றும் பேசாமல் போய்விட்டாள்.

(இன்னும் வரும்)

நீலி வசீகரம்

AN ADAPTATION OF SHAKESPEARE'S "TAMING OF THE SHREW"

(ஆங்கிலேய கவி "ஷேக்ஸ்பியர்" இயற்றிய நாடகத்தின் தமிழ் அமைப்பு.)

நாடக பாத்திரங்கள்

ஒரு ஜமீந்தார்.

ஜம்புகராமன், ஒரு தகரக்கடைக்காரன், வேட்டைக்காரர், வேலையாட்கள், நாடகக்காரர், சத்திரக்காரி, கையாள். } பிரஸ்தாவனையில் வருபவர்கள்

ரகுநாததேவர்:—மதுரையில் ஒரு பெரிய தனிகர்.

நல்லநாயக உடையார்:—தஞ்சைப் பிரபு.

விஜயராகவ உடையார்:—நல்லநாயக உடையாரின் மகன். வனிதேசுவரியின்மேல் காதலானவர்.

நாராயணந்தேவர்:—உறையூர்ப் பிரபு. கௌதமியின் புருஷர்.

பொன்னம்பலத் தேவர், பிரதாபருத்திரத்தேவர் } வனிதேசுவரியை மணக்க வந்தவர்.

சுப்பராயன், கேசவன் } விஜயராகவ உடையாரின் வேலைக்காரர்.

பொன்னன், பழனியாண்டி } நாராயண தேவரின் வேலையாட்கள்.

ஒரு தீர்த்த யாத்திரி.

கௌதமி தேவி:—நீலி, வனிதேசுவரி } ரகுநாத தேவரின் குமாரத்திகள்.

சுசீலை:—பிரதாபருத்திரரின் மனைவி.

தையற்காரன், ஜவுளிக்கடைக்காரன், ரகுநாத தேவரின் வேலையாட்கள், நாராயண தேவரின் வேலையாட்கள்.

நாடக நிகழ்விடம்:—மதுரையிலும், உறையூர்ப் பக்கத்திலும்.

நீலி வசீகரம்

பிரஸ்தாவனை.

அங்கம் 1. களம் 1.

இடம்:—ஓர் சத்திரத்துக்கு முன்பாக

பாத்திரங்கள்:—சத்திரக்காரியும்ஜம்புகராமனும்

ஜம்புகராமன்:—வாயை மூடு; இல்லாவிட்டால் கொன்றுபோடுவேன்.

சத்திரக்காரி:—நாசமாய்ப் போகிறவனே! என்ன, குடிமயக்கத்தில் ஒன்றும் தெரியவில்லைபோலவிருக்கிறது. அயோக்கியத் தனத்தைக் காட்டவாரம்பித்துவிட்டாயா? ஜாக்கிரதையாகப் பேசு.

ஜம்புக:—கழுதைமுண்டை! யாரைப்பார்த்து அயோக்கியன் என்று பேசுகிறாய்? என்னுடைய குலம் கோத்திரங்களைக் கேட்டறிந்ததில்லையோ நீ? விசுவகர்மா குலத்தில் உதித்த நானா அயோக்கியன்! நீ தான் அயோக்கிய முண்டை.

சத்திர:—நீ உடைத்துவிட்ட பானையின் கிரயத்தைக் கொடுத்துவிடமாட்டாயா?

ஜம்புக:—ஒரு நாகூர்ச் சல்லிகூடக் கொடுக்கமாட்டேன். அடுப்பங்கரைக்குப் போய் முக்காடு போட்டுக்கொண்டு குந்தியழு.

சத்திர:—வாங்குகிறவழி எனக்குத் தெரியாமல் போகவில்லை. போய், கொத்தவாலை அழைத்துக் கொண்டு வரவேண்டியதுதான். (போதல்.)

ஜம்புக.—கொத்தவாலைத்தான் அழைத்துவா; தச்சவாலைத்தான் அழைத்துவா; இந்த அதட்டலுக்கெல்லாம் நான் பயந்தவனா? அவன் மகாராஜனாக வரட்டும். (கீழே படுத்துத் தூங்கிப்போய் விடுகிறான்.)

(கொம்பிசேனைசை, ஒரு ஜமீந்தார் வேட்டையினின்றும் திரும்பி, வேலையாட்களுடனும், வேட்டைக்காரருடனும் வருதல்)

ஜமீந்தார்:—நாய்களை எல்லாம் நன்றாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும், இன்றைக்குப் பலமான காயம், நாளைக்கும் வேட்டைக்குப் போக வேண்டும், ஆதலால் அவைகளுக்கு நல்ல இரை வையுங்கள்.

முதல் வேட்டைக்காரன்:—அப்படியே செய்கிறேன், துரையே.

ஜமீந்:—இதென்ன! யாரோ மனிதன் கிடக்கிறானே! செத்துக் கிடக்கிறானா அல்லது குடித்து மயங்கிக் கிடக்கிறானா? உயிர் இருக்கிறதா வென்று சோதியுங்கள்.

இரண். வேட்டை:—உயிர் இருக்கிறது துரையே. குடிமயக்க மில்லாமற் போனால், இவ்வளவு ஈரத்தில் விழுந்து கிடக்கமாட்டான்.

ஜமீந்:—அடா, அசங்கியப் பன்றிக்குட்டி! என்ன கேவலமாய்க் கிடக்கிறான், பாருங்கள்!—இந்தக் குடிகாரனிடம் ஒரு வேடிக்கை செய்யலா மென்று நினைக்கிறேன். வெள்ளை வேஷ்டியுடுத்தி, வெண் சாந்து பூசி, விரல்களில் மோதிரங்களைப் போட்டு பஞ்சணையில் படுக்க விட்டிருந்து, விழித்துக் கொள்ளுகையில் வேலையாட்கள் பலர் பணி கேட்கச் சித்தமாய் நின்றால், இந்தப் பையன் தன்னை மறந்துவிட மாட்டானா?

முதல் வேட்டை:—துரையே! அவனுக்கு ஞாபகமிராது. ஏதோ கனவென்றே நினைப்பான்.

இரண். வேட்டை:—விழித்துக் கொண்டால் ஒருவேளை தெய்வலோகத்தி லிருப்பதாக நினைப்பான்.

ஜமீந்:—ஒருவேளை கனவென்று நினைத்தாலும் நினைப்பான். அவனைத் தூக்கிக்கொண்டு போய் எனது சயன மண்டபத்தில் ஒரு புதுப்படுக்கையின் மீது கிடத்துங்கள்; அவ்வறை முழுவதும் நல்ல வாசனைப் பொருள்களை நிரைத்து, அழகிய படங்களைத் தொங்கவிடுங்கள்; அவன் எழுந்திருக்கும்போது தேவகானம் காதுகளில் வீழ்வதுபோல, வாத்தியங்கள் கோஷிக்கப்படட்டும்; பேசவாரம்பித்தானானால், வெகு பணிவாய்க் கை கட்டி வாய் புதைத்து நின்று கேளுங்கள்; ஒருவன் வெள்ளித் தட்டில் பக்ஷண பலகாரங்களை வைத்துக்கொண்டு நிற்கட்டும்; மற்றொருவன் ஸுகந்தமான பன்னீரை யேந்திக் கொண்டு நிற்கட்டும். வேறொருவன் விலையுயர்ந்த ஆடையாபரணங்களை வைத்துக்கொண்டு நிற்கட்டும்; இன்னொருவன் அவனது அழகைப் புகழ்ந்து கொண்டாடி இதுவரையில் சித்த சுவாதீனமில்லாதிருந்ததைச் சொல்லட்டும்; பின்னுமொருவன், அவனது நாயகி வருந்துகிறாளென்று சொல்லட்டும்; அவனது உண்மை ஸ்திதியைக் கூறுவானானால், அவன் கனவு காண்கிறதாகச் சொல்லுங்கள்; அவன் பெரிய ஜமீந்தாரனே யென்று வற்புறுத்துங்கள். இவைகளை யெல்லாம் ஸர்வ ஜாக்கிரதையாகச் செய்யுங்கள்; இன்றையப் பொழுது இப்படி விநோதமாகக் கழியட்டும்.

முதல் வேட்:—துரையே! நாங்கள் வெகுஜாக்கிரதையாக நடத்துகிறோம்; விழித்துக்கொண்டால், அவன் பெரிய பிரபுவென்று தன்னை நினைத்துக் கொள்ளுவானென்பதில் சந்தேகமில்லை.

ஜமீந்:—சரி; அவனை மெதுவாகத் தூக்கிக்கொண்டு போங்கள்; விழித்துக் கொண்டதும், ஒவ்வொருவனும் தன் தன் வேலையைச் சரியாய்ச் செய்ய வேண்டும். (ஜம்புக ராமன் தூக்கிக்கொண்டு போகப்படுகிறான். வெளியில் முரசறைதல்.) அடே! என்ன சப்தமென்று பார்த்துவா (ஒரு சேவகன் போதல்). யாரேனும் ஒரு பிரபு இன்றைக்கு இவ்விடத்தில் தங்கிப்போகலாமென்று வருவார்போலும். (சேவகன் திரும்பி வருதல்) ஏன்? என்ன விசேஷம்? யார் வருகிறார்?

சேவகன்:—நாடகக்காரர் ஆட வருகின்றனர்.

ஜமீந்:—நல்லது; அவர்களை உடனே வரச்சொல்லு. (நாடகக்காரர் வருதல்.)

நாடகர் தலைவன்:—பிரபுவே! நமஸ்காரம் செய்கிறோம்; சந்நிதானத்தைக் கண்டு வெகு நாளாகி விட்டது.

ஜமீந்:—ஆமாம்; முன்பு நாலு வருஷத்துக்கு முன் "அம்புஜவல்லி" நாடகத்தை யாடிக் காட்டவில்லையா?

நாடக தலை:—ஆமாம்; பிரபோ! அப்போது சந்நிதானம் செய்துபோட்ட "தோடா" கூட இதோ இருக்கிறது.

ஜமீந்:—நல்லது; இன்றைய இரவு இங்கே இருக்கலாமா?

நாட. தலை:—சந்நிதானம் உத்திரவு செய்கிறபடியே நடக்கக் காத்திருக்கிறோம்.

ஜமீந்:—நீங்கள் இப்போது நல்ல சமயத்தில் வந்தீர்கள். நான் இன்றைய பொழுதை விநோதமாகக் கழிக்க வெண்ணினேன்; அதற்கு உங்கள் உதவியும் இருந்தால் நன்றாய்ச் சோபிக்கும். இன்றைய இரவு ஒரு பிரபு உங்கள் ஆட்டத்தைக் காண வருவார்; அவர் இதற்கு முன்பு, 'ஆட்டம்' என்பதைக் கேட்டது கூட இல்லை; ஆதலால் சற்று அதிசயப்பட்டவர் போல விருப்பார்; அதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்பட்டு அவரை ஏறெடுத்

துப்பார்க்கக்கூடாது. வெகு மரியாதையாக விருக்க வேண்டும். கேலி பண்ணினால் அவருக்குக் கோபம் வந்து விடும்.

நாட. தலை:—துரையே! இதைப்பற்றிய கவலையொன்றும் அவ்விடத்துக்கு வேண்டாம்; அந்தப் பிரபு கேவலம் கர்னாடக ஆஸாமியாக இருந்தாலும் நாங்கள் கேலி பண்ணமாட்டோம். வெகு ஜாக்கிரதையாக விருப்போம்.

ஜமீன்:—யாரடா, அங்கே? இவர்களை அழைத்துக் கொண்டு போய், சாப்பாடு செய்துவை. (ஒரு சேவகனும், நாடகக்காரர்களும் போதல்) அடே! (இன்னொரு சேவகனை நோக்கி) நீ போய், எனது கையாள் கிருஷ்ணனுக்கு ஸ்திரீ வேஷம் போட்டு, அக்குடிகாரன் இருக்கும் அறைக்கு அழைத்துக்கொண்டு போ; உயர் குல ஸ்திரீகள் நடந்து கொள்வது போல நடக்க வேண்டுமென்று நான் சொன்னதாக அவனிடம் சொல்லு; அவன் அந்தக் குடிகாரனுடைய மனைவியைப் போல நடிக்கவேண்டும்; கட்டித்தழுவி, முத்தமிட்டுக்கொண்டு இதுகாறும் ஏழுவருஷமாக, நாயகனாகிய அவருக்குச் சித்தஸ்வாதீனமில்லாதிருந்ததினால், தான் தெய்வங்களை வணங்கி வழிபட்டதின் பயனாக, அவருக்கு நற்போதம் வந்ததற்கு அத்தியந்த சந்தோஷப்படுவதாகச் சொல்லட்டும்; ஆநந்த பாஷ்பம் சொரிய வேண்டும்; நினைத்தவுடன் கண்களினின்றும் தாரை தாரையாய் நீரைப் பெருக்கவிடக்கூடிய ஸ்திரீகளின் சாமர்த்தியம் அவனுக்கு இல்லாத போனால், ஒரு கைக்குட்டையில் ஒரு வெங்காயத்தை மறைத்து, கண்ணருகில் கொண்டு போனால், கண்ணீர் ஏராளமாய் வரும். இந்த மாதிரியெல்லாம் ஞாபகமாய்ச் சொல்லு; போ (சேவகன் போதல்). ஐந்தச்சும் ஸ்திரீயைப் போலவே அவனிருப்பான். குரல், நடை, அபிநயம் முதலியவற்றில் அவனுக்கும் உத்தம ஸ்திரீயொருத்திக்கும் அதிக வித்தியாசமிராது. குடிகாரனை, இவன் 'நாயகா' வென்று கூப்பிடுகையில், கூடவிருப்பவர்கள் பார்த்து நகைப்பார்கள். நான் கூட இருந்தால் அவர்கள் அடங்கியிருப்பார்கள். ஆதலால் நானும் போவேன்.

(போதல்.)

(இன்னும் வரும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஈசுவர ஆராதனையின் பயன்:—ஓர் ஆஸ்திகனும் நாஸ்திகனும் ஒரேவழியாய்ப் போய்க்கொண்டிருக்க, அங்கு ஒரு பாழடைந்த கோயிலைக் கண்டார்கள். ஆஸ்திகன் அந்தக் கோயிலை மஹா பக்தியோடு வலம் வருகையில், நாஸ்திகன் அவன் மூடத்தனத்தைப் பார்த்து நகைத்துக்கொண்டு பாதையில் நின்றான். ஆஸ்திகன் வலம் வருகையில், காலில் ஒரு முள் தைக்க, வலி பொறுக்கமுடியாமல் நொண்டிக்கொண்டு நாஸ்திகன் நிற்குமிடம் வந்து சேர்ந்தான். இவன் வருவதற்குள் நாஸ்திகனுக்கு அவன் நிற்குமிடத்திலேயே இரண்டணா காசு அகப்பட்டது. ஆஸ்திகனைக் கண்டவுடனே நாஸ்திகன், அப்பா! உன் பக்தியின் பலனையும், என் நாஸ்திகத்தின் பலனையும் பார்த்தாயா, இதனாலேயே கடவுள் இல்லை என்று தெரியவில்லையா' என்று பரிஹாஸம் செய்தான். இந்த நாவினால் சுட்டவடு ஆஸ்திகன் மனதில் நன்றாய்ப் பதிய 'இதென்ன விபரீதம், கடவுள் நியாய அரசாட்சியுள்ளும் இம்மாதிரியாயும் நடக்கின்றதே. இப்படியானால் கடவுளில்லை போலத் தோற்றுகிறதே' என்று எண்ண, அவன் மனம் கலங்கியது. இவ்வாறு ஒருவன் சிரித்துக் கொண்டும் மற்றவன் அழுது கொண்டும் இருப்பதைப் பார்த்துக் கொண்டே ஒரு மஹான் அவ்விடம் வந்து, இவர்கள் இவ்வாறிருப்பதன் காரணத்தைத் தெரிந்துகொண்டார். உடனே நாஸ்திகனை நோக்கி 'அப்பா உன் கர்மானுஸாரம் உனக்கு இப்பொழுது ஒரு பெரிய புதயல் கிடைத்திருக்க வேண்டும், உன் நாஸ்திக புத்தியால் அது இரண்டு அணாவாகக் குறுகிப்போய் விட்டது' என்று சொல்லி, ஆஸ்திகனை நோக்கி, 'இந்தக் கெட்ட வேளையில் நீ ஒரு ஸர்ப்பந்தீண்டி இறந்திருக்க வேண்டும், உனது பக்தி உன்னை இவ்வளவு லகுவாய் விட்டது' என்று சொல்லி திடீரென மறைந்தார். இந்த ஸமாதானம் இருவருக்கும் நியாயமாய்த் தோன்ற, ஆஸ்திகனுக்கு பக்தி அதிகரித்தது: நாஸ்திகன் தான் இதுவரையில் செய்துவந்த காரியங்களை எண்ணித் துக்கித்து, கடைசியில் ஆஸ்திகனாக மாறினான். இதனால், உலகத்தில் நல்ல ஒழுக்கத்தால் ஒருவனுக்கு துக்கம் வருவது தோற்ற மாத்திரமே ஒழிய, உண்மையில் அவ்வாறல்ல என்பது நன்றாய்த் தெரியவரும்.

சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா?

முன்பு ஒளவை யென்று ஒருவர் இருந்தாள். அவள் ஒரு பண்டிதை. ஒரு சோலையில் அவள் நாவல் பழத்திற்குச் சென்றுகொண்டிருந்தாள். பயல்கள் மரத்தின்மேல் பழமெடுப்பதைப் பார்த்து "அப்பா எனக்கும் இரண்டு பழம் தா" என்றாள். பையன் 'சுட்ட பழமா சுடாத பழமா' என்றான். இவளுக் கொன்றும் தெரியவில்லை. கடைசியாக சுட்டபழமென்றாள். என்றதும், அவன் ஓர்கிளையை விசையாக அசைத்தான். தபகுபலாகப் பழம் கீழ் விழுந்தன. கீழ் வீழ்ந்ததினால் மண்ணும் கல்லுமாய் இருந்தது. அதை எடுத்தவுடன் பயல்கள், கை சுடப்போகிறது ஊது ஊது என்று கூவிச் சிரித்தார்கள்.

***

யுக்தியேசக்தி:—ஒரு ஒட்டன், ஓர் குடியானவன் தோட்டத்தில் மிகக் குறைந்த தொகைக்கு ஒரு கிணறு வெட்டுவதாக ஒப்புக்கொண்டு, நான்கு நாள் கஷ்டப்பட்டு பத்தடி ஆழம் தோண்டினான். மறுநாட் காலையில், அவன் வழக்கப்படி வேலைக்கு வந்தபொழுது, அந்தக் கிணற்றின் பக்கம் இடிந்து விழுந்து, மேற் புரத்திலிருந்து இரண்டு அடி ஆழம் வரையில் மண் மூடியிருப்பதைக்கண்டு, தன் கஷ்டம் வீணாயிற்றென்று விசாரப்பட்டுக்கொண்டு, கொஞ்சம் ஆலொசித்து தன் மேல்வேஷ்டியை கிணற்றங்கரையில் வைத்துவிட்டு, எவரும் காணாதபடி தான் வீட்டுக்குப்போய் படுத்துக்கொண்டான். ஒருமணி நேரத்திற்குப் பிறகு, வீட்டார் கிணறு இடிந்து விழுந்திருப்பதையும், ஆளில்லாமல் மேல் வேஷ்டிமட்டும் கிணற்றங்கரையி லிருப்பதையும் பார்த்து, ஒட்டன் இறந்தானென்று நினைத்து, அந்தச் சங்கதியை எல்லாருக்கும் தெரிவித்தார்கள். அயலார் பதின்மர்வந்து கிணற்றிலிறங்கி அதிவிரைவில் அந்த மணலை வாரி எடுத்துவிட்டார்கள். ஆனால் அதிக ஆழந் தோண்டியும், ஒட்டன் காணப்படாமையால், எல்லோரும் ஆச்சரியப்படத் தொடங்கினார்கள். அதற்குள் ஒட்டன், கையில் கடப்பாரையுடன் வந்து "அப்பன்மாரே என்பொருட்டு நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டீர்கள். உங்களுக்கு எப்படி நன்றியறிதலைக் காட்டுவேன். நான் விடிய ஒருமணி நேரத்துக்குமுன் இவ்விடம் வந்தேன். எனக்குத் தலைநோய் கண்டதினால், நிற்கமாட்டாமல் சற்றுக்கழித்து வரலாமென்று வீட்டுக்குப் போய்விட்டேன். அதற்குள் நீங்கள் எல்லோரும் எனக்கு இந்த உபகாரத்தைச் செய்தீர்கள், என் அதிர்ஷ்டத்தை என்னென்று சொல்வேன். உங்களுக்கு என்றும் நான் நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன். நான் ஏழையல்லவா" என்று சொல்லிக்கொண்டு கிணற்றிலிறங்கித் தோண்ட ஆரம்பித்தான். அப்பொழுது இருந்தவர்களில் சிலருக்கு அவன் வார்த்தை ருசிக்காமல் அவன் மேல் கோபங்கொண்ட போதிலும், மற்றவர்கள் களிப்புடன் சிரித்தார்கள்:—அறிவுடைமையால் எவ்வகையான ஆபத்தையும் விலக்கிக்கொள்ளலாமென்று இதனால் விளங்கும்.

***

கர்வம் கேடு விளைவிக்கும். சந்திரவம்சத்தில் யயாதி என்னொருவ அரசன் இருந்தான். அவன் தனது பிள்ளையினிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு வனம் சென்று தவம்செய்து ஸ்வர்க்கமடைந்தான். அங்கு கொஞ்ச காலம் வாஸம் செய்த பிறகு, இந்திரன் யயாதியைப் பார்த்து நீ யாரைப் போலத் தபோபலமுடையவர் என்று கேட்க, அதற்கு யயாதி 'ஒரு ரிஷியும் எனக்கு நிகரல்ல,' என்று பெருமை பாராட்டினான். உடனே இந்திரன் 'நீ செய்த ஸத்காரியங்களெல்லாம், இந்த மதுமொழியோடு க்ஷீணித்து விட்டன. ஆகையால் உன்னை எனது ஸேவகர்கள் பூலோகத்திற்குத் தள்ளிவிடுவார்கள், போகலாம்' என்று யயாதியை ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளிவிட்டான். இதனால் 'துள்ளின மாடு பொதி சுமக்கும்' என்பது எளிதில் விளங்கும்.

***

ஸித்திகள்.—ஹடயோகி ஒருவன் ஓர் மஹானிடம் சென்று தனக்கு ஆகாயத்தில் பறக்கசக்தி இருக்கின்றதென்றும், பூமியின் கீழ் அனேக காலம் கிடக்குந் திறனுண்டென்றும்; ஜலஸ்தம்பம் தெரியுமென்றும், இது போன்ற மற்றைய சித்து வித்தைகள் தெரியு மென்றும் பெருமை பாராட்டினான். அப்பொழுது மஹான் அப்பா பக்ஷிகள் ஆகாயத்தில் பறக்கின்றன, புழுக்கள் பூமியின் கீழ் அதிக காலம் மறைந்து கிடக்கின்றன, மீன்கள் ஜலத்தில் வஸிக்கின்றன, இம்மாதிரித் தாழ்ந்த ஜந்துக்களைப் போல் நடப்பதினால் என்ன பயன். கடவுளைப் போல நடக்க, கருணை முதலிய நற்குணங்களை விருத்தி செய், கர்வத்தையும் கோபத்தையும் அடக்கி விடு என்று மறுமொழி கூறினார். தாயுமானவரும் 'சினமிறக்கக் கற்றாலும் ஸித்தி எல்லாம் பெற்றாலும் மனமிறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே' என்றசொல்லி இருக்கிறார். ஆகையால் மனது தனது வாஸனைகள்யாவையும் இழந்து, அதன் உண்மை நபத்தை அடைதலே ஸகல ஸித்திகளையும்விட மேலானது என்பது இக்கதையால் எளிதில் விளங்கும்.

கடன் படுவதினால் வரும் கெடுதி:—

"கடமுண்டு வாழாமை காண்டலினிதே" என்றபடி எப்படிப்பட்டவராயினும், எக்காலத்திலும் கடன்வாங்காமல் உள்ள மட்டும் தமது கைப்பொருளைக் கொண்டு வாழ்வதே மிகவும் உத்தமமாம். "குறைக்குட்டம் கூத்தாடும்" என்பதுபோல் கைப்பொருளின்றிக் கடன்பட்டு வாழ்பவனும் யோக்கியனாகமாட்டான். கடன்பட்டவன் யதார்த்தவாதியாயிருப்பதும் கடினமே. ஆனது பற்றியே கடனானது பொய்யைத்தன் முதுகில் தூக்கிக்கொண்டு வருகின்றதென்கிறார்கள். கடன்காரன் தான் வாங்கின கடனைக் கடன்கொடுத்தவனுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியதற்குக் காலதாமதம் செய்வதைப்பற்றிப் பலசாக்குப் போக்குகள் சிருஷ்டிக்க ஆரம்பிப்பான். ஒரு போதும் எங்கும் கடனே வாங்கக்கூடாதென்று ஒரே உறுதிப்பாடாயிருப்பவர்களுக்குக் கடன் வாங்காமலே வாழ்வது கூடுமான காரியந்தான். ஆயினும், முதலில் ஒருமுறை கேட்கும்போதே கடன்கிடைக்குமாயின், அவ்வண்ணமே அடுத்தடுத்துப் பல முறை கடன் வாங்கவேண்டுமென்று ஆசை பிறக்கின்றது. பின்பு அவன் சீக்கிரமே கடன் வலைக்குள் சிக்கிக்கொண்டு மறுபடி அதை விட்டு மீள வழி தெரியாமல் அல்லாடும்படி யாகின்றது. கடன் வாங்க முயல்வது பொய்சொல்ல முயல்வது போலவேயன்றி வேறல்ல. முதலில் ஒருபொய் பேசினால் அதை மெய்ப்பிக்கப் பிறகு பலபொய் பேச வேண்டிவருவதுபோல, முதலில் ஒருதரம் கடன் வாங்கினால் அதைத் தொடர்ந்து பிறகு பலதரம் மேன்மேலும் கடன் வாங்கும்படி நேரிட்டுக்கொண்டேவரும். அதை விட்டு விலக ஒரு போதும் வழி அகப்படாது. தான் கடன் வாங்கத் துவக்கின நாள் தொடங்கித் தனக்குச் சிறுமையேயொழியப் பெருமை ஒரு போதும் உண்டானதில்லை எனப்பெரியோர் ஒருவர் சொல்லி யிருக்கிறார். "கடன் வாங்கினவன் மடியில் கல நெருப்பு" கடன் வாங்கித்திரிவோன் மனங்கலங்கித் திரிவான்" என்றும் பழமொகள் வாஸ்தவமென்று அனுபவசித்தமாய் அநேகர் அறிந்திருக்கிறார்கள். கடன்படாமல் உனக்கு, அமையாதாகில் நீ எவ்வகை இன்பத்தையும் விலைகொடுத்து வாங்காதே, ஒரு பொழுதும் கடன்படாதே, அதைவிட இழிவு வேறில்லை. ஆயினும் பிறர்க்குக் கடன் கொடுத்து உதவ வேண்டாமென்று நான் ஒருபோதும் சொல்லத் துணியேன். அப்படிக் கடன் கொடுப்பதனால் நீ வாங்கின கடனை இறுக்கத்தடையுண்டாகுமாயின், அப்படிப்பட்ட காரியத்தில ஒருபோதும் தலையிடாதே, எப்படிப்பட்டகாலத்திலும் ஒருபோதும் கடன் வாங்காதே என்று ஒருவர் தன் சிஷனுக்குப் புத்தி புகட்டி யிருக்கிறார்.

ஒருவன் உலகத்தில் தலையெடுக்கத் துவக்கும்போதே கடன் வாங்க ஆரம்பிப்பானாயின், அவன் அவ்வளவோடு அழிந்து போனவனே. கடன்வாங்குவது தகாத காரியமென்று மாத்திரம் எண்ணாதேயுங்கள். அதுவே பெருந்துக்கமென்று அனுபவத்தில் காண்பீர்கள். கடன் வாங்குபவன் உடனே தரித்திரத்துக்கு உள்ளாவான். தரித்திரமானது நன்மைசெய்யும் வழிகளை அநேகமாய் ஒழித்து, தீமைக்கு இடங்கொடாது நிற்கும் தேகபலத்தையும் மனோபலத்தையும் மிகவும் ஒடுக்கும்; ஆதலால் நல்வழியிலேயே ஏற்ற உபாயங்களைக் கொண்டு அதை விலக்குவது நமது கடன். ஆகவே எவனிடத்திலும் கடன் படாதிருப்பதே நமது முக்கியமான நோக்கமாயிருக்கவேண்டும்; நம்மிடத்திலுள்ளது எவ்வளவு சொற்பமான பொருளாயினும், சிறுகச்செலவு செய்து சுகமாயிருக்க வழிதேட வேண்டும். தரித்திரமானது நமது சவுக்கியத்துக்குக் கொடிய சத்துருவாம். அது நமது சுவாதீனத்தைப் போக்கடித்து சில நற்கருமங்களை நமக்குச் செய்ய அசாத்தியமாகவும் மற்றவைகளை மிகக் கடினமானவைகளாகவும் செய்துவிடும். மிதச்செலவு செய்வது மனவமைதிக்கு மாத்திரமே மூலகாரணமன்று; பரோபகாரம் செய்வதற்கும் மூலமாயிருக்கின்றது. பிறர் கையைப் பார்த்துக்கொண்டிருப்பவன் எவனும் தான் பிறர்க்கு உதவி செய்ய ஒருபோதும் வல்லவனாகமாட்டான். ஆதலின் "தன்னை மிஞ்சித் தருமம்" என்றபடி முதலில் தனக்கு வேண்டியதைத் தேடிவைத்துக்கொண்டு பிறகு இயன்றளவு பிறர்க்கும் உதவிசெய்து வரவேண்டும்.

* * *

கைம்மாறு கருதும் பக்தியைப் பழித்தல்:—ஒரு அரசன் வேட்டையாடிக்கொண்டு வரும்பொழுது காட்டில் ஒரு ரிஷியைக் கண்டான். அவரோடு கொஞ்சநாழிகை வார்த்தையாடி வருகையில் அரசன் அவரது சிறப்பைக்கண்டு வியந்து, அடிபணிந்து தான் கொடுக்க எண்ணும் வெகுமதியை அங்கீகரித்துத் தன்னை அனுக்கிரஹிக்கும்படி மஹா விநயத்துடன் கேட்டுக்கொண்டான். அதற்கு அவர் 'அப்பா, எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை. எனக்கு

எவ்விஷயத்திலும், குறைவென்பதே கிடையாது. இம்மரங்கள் என் ஆகாரத்திற்கு வேண்டிய பழங்களைக் கொடுக்கின்றன. எனக்கு வேண்டிய தீர்த்தத்தை இந்த அழகிய ஆறு அளிக்கின்றது. நான் இக்குகைகளில் வஸிக்கின்றேன். நீ எவ்வளவு சிறந்த சக்கிரவர்த்தியாய் இருப்பினும் உன் வெகுமதிகளால் எனக்கு என்ன பிரயோஜனம்? என்று மறுமொழி சொல்ல, அரசன் "உமக்கு நான் கொடுக்கும் வெகுமதிகள் பயனற்றவையாய் இருப்பினும், நான் பரிசுத்தமாகி மேன்மை அடைவதற்காகவாவது, கிருபைகூர்ந்து என் வெகுமதிகளை அங்கீகரிக்க என்னுடன் என் பட்டணம் வரவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். இவ்வளவு அரசன் சொன்னபின்பு, ரிஷி இதற்கு இசைந்து அரசன் அரண்மனை வந்து சேர்ந்தார். அங்கு எங்கு பார்த்தாலும், நகைகளும், ரத்னங்களும், சிறந்த வஸ்துக்களும், தனங்களும், அதிகார தோரணைகளும் காணப்பட்டன. அரண்மனை வந்ததும் அரசன் ரிஷியை ஓரிடத்தில் இருக்கச் சொல்லிவிட்டு அருகாமையில் ஓரிடத்தில் சென்று கடவுளை நோக்கி 'ஓ! பரம்பொருளே! எனக்கு தனம், குழந்தைகள் ராஜ்யங்கள் முதலியன வர வர விருத்தியாகிக்கொண்டே வர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். இதைக்கேட்டுக் கொண்டிருந்த ரிஷி உடனே எழுந்து வெளியே புறப்பட்டார். இப்படி எழுந்து போய்க் கொண்டிருந்த ரிஷியை அரசன் நோக்கி 'ஸ்வாமீ! என் என் வெகுமதியைப் பெற்றுக்கொள்ளாது போகிறீர்கள்? தயவுசெய்து நில்லுங்கள்' என்று சொல்ல, அதற்கு அந்த ரிஷி 'பிச்சைக்காரப்பயலே! நான் பிச்சைக்காரரிடம் பிச்சை வாங்குவதில்லை. நீயே பிச்சை எடுப்பவனாக இருக்கையில் எனக்கு உன்னால் என்ன கொடுக்க முடியும்' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டார். ஆகையால் கடவுளை ஆராதிக்குங்கால் எனக்கு இவ்விவ் விஷயங்கள் வேண்டும் என்று கேட்பது கேவலம் வியாபாரமாகுமே ஒழிய பக்தியாக மாட்டாது. இவ்வித ஆராதனையால் சிறந்த பலன் ஒன்றும் உண்டாகாது.

* * *

பரோபகாரத்தின் ஸ்வரூபம்:—பாண்டவர்களில் ஜேஷ்டரான தருமபுத்திரர் அசுவமேதயாகம் செய்து அதில் ஏழைகளுக்கு அளவிறந்த பொருள்களை தானம் செய்தனர். எல்லோரும் இந்த மாதிரியான பரோபகாரம் எங்கும் கண்டதில்லை என தருமபுத்திரரைப் புகழ்ந்து பேசினர். இப்படி இருக்கையில், அங்கு பாதி தேகத்தில் பொன்னிறம் பாய்ந்த ஒரு கீரிப்பிள்ளை வந்து யாகசாலை முழுவதும் புரண்டு எழுந்து 'இது என்ன யாகம், இதைச் சிறந்ததென நீங்கள் ஏன் வீணாகக் கொண்டாடுகிறீர்கள்' என்று அங்குள்ளவரை நோக்கிச் சொல்லியது. 'ஏன் நீ இவ்வாறு சொல்லுகிறாய்' என்று அங்குள்ளவர் கேட்டதற்கு கீரிப்பிள்ளை சொல்லத்தொடங்கியது. 'ஒரு சிறு கிராமத்தில் ஒரு பிராமணன், அவன் பெண்சாதி, அவன் பிள்ளை அவன் நாட்டுப்பெண், ஆகிய நால்வரும் உஞ்சவிருத்தியில் பிழைத்து வந்தார்கள். அங்கு ஒரு காலத்தில் கொடிய பஞ்சம் வர, அப்பிராம்மணருக்கு ஐந்துநாள் வரையில் ஒன்றும் அகப்படவில்லை. ஆறும் நாள் அவர் வீட்டிற்கு கொஞ்சம் கோதுமை மாவைக்கொண்டு வந்து, அதை நான்கு ஸரிபாகமாகப் பிரித்து ஒவ்வொருவருக்கு ஒரு பாகத்தைக் கொடுக்க நால்வரும் சாப்பிடத் தொடங்கினார்கள். அத்தருணத்தில் ஒரு அதிதி வந்து கதவைத்தட்ட பிராம்மணர் எழுந்து, தற்செயலாய் வந்த அதிதியை தெய்வமெனக்கொண்டாடி, தனது பாகத்தை அவர்முன் வைத்தார். அதிதி உண்டு பசியடங்காதது கண்டு, இன்னும் வேண்டுமென்று கேட்டார். பிராம்மணர் செய்த உபகாரத்தை மற்றைய மூவரும் பூர்த்தி செய்வதற்காகத் தமது பாகங்களை முறையே கொடுக்க, வந்த அதிதி பசி தீர்ந்து பிராம்மணரை வாழ்த்திச் சென்றார். அன்றிரவு அக்குடும்பத்தில் யாவரும் இறந்து மோக்ஷத்தை அடைந்தனர். அந்த வீட்டிற்கு நான் சென்று புரள, தரையில் சிந்தியிருந்த கோதுமைமாவு என்மேல் பட்டது. உடனே எனது பாதி தேகம் பொன்னிறத்தை அடைந்தது. இதைப் போன்ற சிறந்த பரோபகாரம் எங்கேயாவது இருக்குமா என்று நான் பார்த்து வருகிறேன். நான் இங்கும் என்னாலான மட்டும் புரண்டு பார்த்தேன். என் தேகத்தில் மற்றைய பாதி பொன்னிறமாகவில்லை. ஆதலால்தான் இதை நான் சிறந்த யாகமென்று ஒப்புக்கொள்ளமாட்டேன்' என்றது. இதனால் உண்மையான பரோபகாரத்தின் ஸ்வரூபம் இன்னதென்பது நன்றாய் விளங்கும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
LADIES' PAGES

ஆண் பிள்ளைகளுக்கு, தாய் தந்தை குரு இவர்கள் தெய்வமாகின்றார். பெண்களுக்கு கணவன்தான் பெரிய கடவுள்.

* *

திருவள்ளுவர் தன் மனைவியைக் கூப்பிட்டார். அவள் கிணற்றில் நீர் தூக்கிக்கொண்டிருந்தாள். அவர் கூப்பிட்டது கேட்டதும், சகட்டிலேயே நீர்ப் பாத்திரத்தை விட்டுவிட்டு, உடனே ஓடிவந்தாள். அது எப்படி விட்டுவிட்டுப் போனளோ, அப்படியே நின்றுக்கொண்டிருந்தது. இதுவே கற்பின்மகிமை.

* *

தருமமென்கிற பண்டத்தைக் கொண்டு இல்லற வாழ்க்கை யென்கிற வண்டியை இழுக்க கட்டி இருக்கும் மாடுகள் கணவனும், மனைவியும்; இவ்விருவரும் சரியாக ஒத்து நடந்தாலன்றி சம்சார வாழ்க்கை ஸௌக்கியமாகாது.

* *

முன் காலத்தில் ஜமதக்னி பகவான் என்று ஒரு மஹாரிஷி இருந்தார். இவர் பரசுராமருடைய தகப்பன். ஜமதக்னி பகவானுடைய மனைவி, தன் பதிவிரதா தர்மத்தினால்,மணலால் செய்த குடத்தில் ஜலமெடுத்து வருவது வழக்கம். ஒரு நாள் அவள் அவ்வாறு கொண்டுவரும் வழியில், மேல் சென்றுக்கொண்டிருந்த கந்தருவரின் அழகைப்பார்த்து அதிசயிக்கையில், பாதிவிருத்யம் பங்கமாய் விட்டதால், மணல்குட முடைந்து நீர் கீழ் சிந்திவிட்டது.

* *

கண்களிரண்டும் சேர்ந்து ஒரே வஸ்துவைப் பார்ப்பதுபோல, கணவனும் மனைவியும் ஒரே கருத்தை உடையவர்களாக இருக்கவேண்டும்.

* *

திருவள்ளுவரென்று பெரிய தமிழ் கவி ஒருவர் இருந்தார். அவர் மனைவி மகா பதிவிரதை. தன் பர்த்தாவினுடைய சிசுருஷையே தனது வேலையென்று இருப்பவள். அவளிடத்து கொங்கணர் என்று ஒருவர் பிச்சைக்கு வந்து, மிக நேரம் காத்திருந்தார். அவர் தனக்கு தவமகிமை அதிகமென்று கர்வம் கொண்டிருந்தபடியால், அவளை அதிகாரம் செய்யத் தொடங்கினர். இதைக்கவனியாது, தன்கணவனுக்கு செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு அவள் பிச்சையிடவந்தாள். அப்போது கொங்கணர் கோபித்துக்கொள்ள அவள் "கொக்கென்று நினைத்தனையோகொங்கணவா?" என்றாள். அவர் உடனே பயந்து போய் விட்டார். (அவர் ஓர் கொக்கைப்பார்த்து கோபித்துக் கொண்டபோது, அது இறந்து விட்டதாம். அதனால்தான் அவர் அவ்வளவு கர்வமுற்று இருந்தார். ஆகையால், அவள் எவ்வாறிந்த சங்கதியை யறிந்து சொன்னளோ வென்று பயந்து போய் விட்டார்.)

* *

எந்தக்காரியம்செய்தாலும்பிரதிப்பிரயோஜனத்தை எண்ணமல் செய்யவேண்டும்.பிரதிப் பிரயோஜனத்திற்காக செய்வது பெரிதன்று. இதுவே கீதையிலும் சொல்லப்பட்டது. ஓர் பெண்ணும் தன் கணவனுக்கு தக்கவாறு நடப்பதில்,பிரதி பிரயோஜனத்தை எண்ணமல் நடக்கவேண்டும். இல்லாவிட்டால் அவள் நடத்தை பதிவிர்தாதர்ம மாகாது.

* *

நகர் சோதனை செய்துகொண் டிருக்கையில் இராமர் ஒருநாள், ஒரு வண்ணனுக்கும் அவன் மனைவிக்கும் நடந்த சம்பாஷணையில் "இராவணனிடத்திலிருந்த சீதையை இராமன் அழைத்துக்கொண்டது போல, நான் உன்னை அழைத்துக்கொள்ள மாட்டேன்" என்றுசொல்லியதைக்கேட்டு, இராமர் சீதையை காட்டில் விட்டுவரும்படி லக்ஷ்மணருக்கு உத்திரவுசெய்தார். பெண்கள், தங்கள் புருஷர் வீடல்லாத விடங்களிலிருந்தால், அவர்களுக் கபவாதத்திற்கே இடமாகும்.

* *

பார்வதி, ஸரஸ்வதி, லக்ஷ்மி இவர்களைப் பார்த்து நாரதர் நீங்கள் பதிவிரதைகளானல் இந்த கல் கடலையை சமையுமென்றார். அவர்கள் சிரித்து "என் எங்களை பரிகாசம் செய்கிறீர்கள், எங்கேயாவது கல்லை சமைக்கமுடியுமோ" என்றார்கள். அவர் உடனே அத்ரிமகாரிஷியினுடைய பெண்சாதியிடத்தில் அவைகளைக் கொடுத்து, சமைக்கச் சொன்னர். அவள் உடனே அவரை உட்காரச்சொல்லி,விட்டு, பர்த்தாவினுடைய கமண்டலுவிலுள்ள நீரைத்தெளித்து தன் கணவனை ஸ்தோத்திரம் செய்து இந்த கல் கடலை பதமாக வேண்டுமென்று நினைத்தாள். நினைத்ததும் மல்லிகைப் பூப்போல் நன்றாக அவை பதமாயின. இதைக் கொண்டுபோய்

நாரதர், பார்வதி முதலானவர்களுக்குக் காட்ட அவர்கள் வெட்கமடைந்தார்கள். கர்வம் பதிவிரதா தர்மத்திற்கு பங்கமுண்டாக்குகின்றது.

* * *

நாரதர் பதமான கல்கடலையைக் கொண்டுவந்து கொடுத்ததும், அந்த மூன்றுபேர்களுக்கும் அத்ரி பத்னியாகிய அனுஸூயைமேல் காரமுண்டாகி விட்டது. உடனே அவர்கள் தங்கள் பர்த்தாக்கள் வந்ததும் அனுஸூயையின் கற்பை அழித்துவிடவேண்டுமென்று ஹடஞ்செய்தனர். அனஸூயையின் கற்பின் சிறப்பை வெளிப்படுத்தக் கருதிய திருமூர்த்தில் அவ்வாறு செய்ய ஒத்துக்கொண்டு பிக்ஷுக வேஷத்துடன் அத்ரிமகாரிஷியில்லாத காலத்தில் அவர் ஆசிரமத்தில் சென்று, அனுஸூயையை நக்னமாக பிக்ஷையிடும்படி வேண்டினர். அவளும் அப்படியே ஆகட்டுமென்று தன் கணவன் உதகமண்டலுவின் நீரை அவர்மேல் தெளித்தாள். உடனே அவர்கள் மூன்று குழந்தைகளாய் விட்டார்கள். விட்டதும் அம்மணமாய் அக்குழந்தை மூவர்க்கும் அன்னமூட்டினள். இது வல்லவோ கற்பின் வலிமை.

* * *

அநேக நாள்கள் கடந்தன. பிரம்மா விஷ்ணு மகேசுவரர் குழந்தைகளாக அனசூயை வீட்டில் இருப்பதாகத் தெரிந்து, லக்ஷ்மி, ஸரஸ்வதி பார்வதி இவர்கள் மூவரும் அவள் வீட்டிற்குச் சென்று தங்களுக்கு மாங்கல்யபிக்ஷை கேட்டதாக புராணங்கள் சொல்லுகின்றன. கீழ்மை அடைவதற்கு கர்வமும், குரோதமும் வழியைக் காட்டுகின்றன.

* * *

அப்பொழுது திரிமூர்த்திகளும் அனஸூயையினது கற்புநிலைக்கு மெச்சித் தமது அம்சங்களால் அவளுக்கு பிள்ளையாக அமர்ந்தனர். அவரே தத்தாத்ரேய மஹாயோகி.

* * *

மழையில்லா விட்டால் நாட்டிற்கு ஸுகமில்லை. மழையும், தபஸில்லாவிட்டால் கிடையாது. தபஸிகளும், கிரகஸ்தர்களை ஆச்ரயித்து இருந்தால் ஒழிய இருக்கமுடியாது. அப்படி ஆச்ரயிப்பதும் சரியான பத்னிகளிருந்தால் தான் முடியும்.

* * *

வரும்படி எவ்வளவு வருகின்றதோ அதற்கு தகுந்த மாதிரி சிலவு செய்துக்கொண்டும், கணவனுக்கு செய்யவேண்டியதை செய்துக் கொண்டும் குலாசாரங்களை தவறாமல் நடத்திகொண்டும், கோபமில்லாமற் நற்குணமுடையவளாக எவள் இருக்கிறாளோ, அவள்தான் சரியான பத்தினியென்று சாஸ்திரங்கள் அலைமோதுகின்றன.

* * *

உலக மேன்மைக்கு ஜனங்கள் நற்குணங்கள் உடையவர்களாக விருக்கவேண்டும். ஜனங்களுக்கு பெருந்தன்மை, தேசாபிமானம், முதலிய நற்குணங்கள் இருக்கவேண்டுமென்றால், இந்த குணங்கள் அவர் சிறு வயதிலேயே மனதிலுண்டாக வேண்டும். ஆகவே அவர்களுடன் சிறுவயதில் பழகுகிறவர்கள் அந்த குணங்கள் உண்டாகி தினே தினே விருத்தியாகும்படி செய்யவேண்டும். குழந்தைகளுடன் ஜாஸ்தியாய் பழகுபவர்கள் அவர் தாய்களேயன்றி வேறுயார்? ஆனதினால் அவர்களால்தான் குழந்தைகள் குணம் சிறக்கவேண்டும். அக்குழந்தைகளின் வளர்ச்சியின்மேல்தான் பின்னால் உண்டாகும் உலகஸுகம் நிலைத்திருக்கிறது. ஆனதினால் தாய்கள் தங்களுடைய நடத்தைகளினால் குழந்தைகளுக்கு நற்குணங்கள் உண்டாகும்படி செய்யவேண்டியது அவசியம்.

* * *

கம்பரென்று பெரிய கவியொருவரிருந்தார். அவர் ஸீதை அசோகவனத்திலிருக்கும்போது "மென்மருங்குல்போல்" சரீரமுழுதுமாகிய தென்று வர்ணித்திருக்கிறார். இடை மிகவும் நுட்பமாக இருக்குமென்று வர்ணிப்பது வழக்கம். அதுபோல அவளுக்கு சரீரமிருந்த தென்றார். அதாவது மிகவும் கிருசமாயிருந்தது. கணவனைப் பிரிந்ததினால், இருந்தும் இல்லாமல் போல் ஆய்விட்டாள். கணவனை விட்டுப் பிரிந்த பெண்கள் நிலைமை நிலத்தில் இட்ட மீன் போலாகும். மிகவும் கொடிது.

* * *

கிருஸெல்டா என்பவள் ஒரு ஏழைக்குலத்தில் பிறந்த ஓர் ஸ்திரீ ரத்னம். அவளுக்குக் கணவனாக வாய்த்த அரசன் ஒருவன் அவளை எவ்வளவோ விதமாகக் கஷ்டப்படுத்திக் கொஞ்சகாலம் பரிசோதித்துப் பார்த்தான். அவள் எப்பொழுதும் பொறுமையுடன் மனங்கோணாது தன் விஷயத்தில் அன்புடன் இருப்பதைக்கண்டு, அரசன் அவளை மிகுந்த ஆதரவுடன் கொண்டாடி அவளுடன் வெகுகாலம் ஸுகித்து வந்தான். இதனால் பெண்கள் கிருஸெல்டாவைப்போலப் பொறுமையாயிருந்தால் எவ்வளவு பிடிவாதம் உடைய கணவர்களையும் தம் வசப்படுத்தலாம் என்பது எளிதில் விளங்கும். (இக்கதை அடங்கிய சிறு புத்தகம் விலை அணா. 3 தான்: வேண்டுபவர் விவேகபோதினி மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்).

வா. சேஷகிரி சாஸ்திரி

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

1. விசேஷமான மோடார் வண்டிகள்:—தெருவில் அதிவேகமாகப்போகும் மோடார் வண்டிகளை அநேகர் கண்டிருக்கலாம். அதில் இப்பொழுது புதிதான யந்திரங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றனவாம். அவைகளின் பலத்தால் மோடார் வண்டிகளுக்கு, வேலி, சிறு கால்வாய்கள், முதலிய தடைகளை லக்ஷ்யம் செய்யாது தாண்டிப் போவதற்கும், போகும் வழியில் அதிகமாக நிலத்தில் பதியாது வெகு வேகமாகச் செல்லுவதற்கும் வேண்டிய சக்திகள் உண்டாயிருக்கின்றன. இந்த யந்திரங்களால், வேலி முதலியவைகளின் அருகில் வந்ததும், இவ்வண்டியின் முன் சக்கிரங்கள் உயரக் கிளம்ப, வண்டி வெகு லகுவாக அவைகளைத் தாண்டி அப்புறம் செல்லுகின்றது. கீழே விழுங்கால் வண்டிக்கும் அதனுள் இருப்பவருக்கும் அபாயம் வராதிருக்கும்படி சிற்சில யந்திரங்களும் அதனுள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு சுற்று சக்கரத்தின் சக்தியால் வண்டி ஓடும்பொழுது, பூமியில் அதிகமாகப் பதியாது இருக்கிறது. இதனால், ஸாதாரணமாகப் போகும் வேகத்தைப் போல் இருமடங்கு வேகமாக வண்டி போகும். கரடுமுரடான நிலப்பாங்குகளிலும் இவ்வண்டிக்கு ஓடும் திறன் உண்டாகின்றது.

*
* *

2. உரோமம் தேகஸௌக்கியத்தைக் காட்டும்:- இக்காலத்து வைத்தியர்கள் நகத்தின் வளர்ச்சியால், ஒருவனது தேகத்தின் நிலையை எளிதில் அறியலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். நகங்கள் தளதளப்போடு சீக்கிரமாக ஒருவனுக்கு வளர்ந்துவருவது அவனுக்கு ரக்த ஓட்டம் ஜீர்ண சக்தி, தேகத்தின் பொது ஸ்திதி முதலியன நல்லநிலையில் இருக்கின்றன என்பதைக் குறிப்பிக்கின்றது. டோகியோ நகரத்திலிருக்கும் ஜபானிய வைத்தியர் ஒருவர் தேகக்கூறை அறிவதில் நகங்களின் உபயோகத்தை அங்கீகரிப்பதும் அல்லாமல், ஒருவனுக்கு உரோமம் வளரும் விதம், அவன் தேகத்தின் நிலைமையைநன்றாக வெளிப்படுத்துகின்றது என்று, மிகுந்த பரிசோதனை செய்து வெளியிட்டிருக்கிறார். அவர் பரிசோதனையால் வெளியாகும் விஷயங்கள் பின் வருவன. தேகஸௌக்கியம் குறையக் குறைய உரோமம் அடர்த்தியாயும், நீளமாயும், தடிமனாயும் வளர்வதில்லை. ஒருவனது அநேக உரோமங்களை எடுத்து அவைகளின் குறுக்குஅளவைக் கண்டு அவனுக்கு ஸௌக்கியக்குறைவு இவ்வளவு இருக்கலாம் என்று கண்டுபிடிக்கலாம். வழுக்கைத்தலை, தேகத்தின் பலக்குறைவையே காட்டுகின்றது. ஆனால் அந்த பலக்குறைவு வழுக்கைத் தலையுடையவருக்கு அவ்வளவு வெளிப்படையாகத் தெரியவரமாட்டாது. இவ்விஷயங்கள் ஸாதாரணமாக வைத்தியம் செய்யுங்கால் உபயோகப்படாமல் இருப்பினும், பிரேத பரிசோதனாகாலங்களில், இறப்பதற்கு முன் அம்மனிதனது தேகக் கூறு எவ்வாறு இருந்தது என்பதை அறிய மிகுந்த ஸஹாயமாக இருக்கும்.

*
* *

3. வேஷச்செவிடனை வெளியாக்கும் விதம்:-ரஷ்யாதேசத்து வைத்தியர் ஒருவர் செவிடர் என்று வேஷம் போடுபவரைக் கண்டுபிடிப்பதற்கு நல்லவழி ஒன்று கண்டு பிடித்திருக்கிறார். செவிடன் என்று சொல்லிக்கொள்ளுபவனை ஒரு சட்டை போட்டுக் கொள்ளும்படி செய்து, அதேமாதிரியான சட்டை நாமும் போட்டுக்கொண்டு அவன் பின் புறத்தில் நாம் நின்று கொள்ள வேண்டியது. நாம் கையாலும், பிரஷாலும் அவன் முதுகில் இழுக்கப்போகிறதாகவும், அதை இன்னதால் தான் இழுத்ததாக அறிந்து சொல்லவேண்டும் என்று அவனுக்கு தெரிவித்து விடவேண்டும். அதன் பின்பு அவன் முதுகில் கையாலும் நமது மார்பில் பிரஷாலும், மறுபடியும் அவன் முதுகில் பிரஷாலும் நமது மார்பில் கையாலும் மாற்றிமாற்றி மெதுவாக இழுத்து அவனை இவைகளைஅறிந்து சொல்லும்படி செய்ய வேண்டும். அவன் காதுகேட்பவனாக இருந்தால், கூடிய சீக்கிரத்தில் முதுகில் உண்டாகும் சப்தமும், நமது மேல் உண்டாகும் சப்தமும் அவன் காதில்பட அவனுக்கு குழப்பம் வந்துவிடும். ஒன்றும் சொல்லமுடியாது. அவன் தத்தளிப்பான். செவிடனோ காது கேட்காததால் தன்முதுகில் படுவது இன்னது என்பதை தவறாது அறிந்துசொல்லுவான். பாசாங்குக்காரனுக்கு ஸ்பர்சம், சப்தம் இரண்டும் சேர்ந்து குழப்பத்தை உண்டாக்கிவிடுகின்றன. உண்மைச் செவிடனுக்கு ஸ்பர்சமாத்திரம் அறியும் வழியாக இருப்பதால் அம்மாதிரியவனுக்கு குழப்பம் உண்டாவதில்லை.

*
* *

4. நெருப்பு பற்றாதமரம்:—அஸ்பெஸ்டாஸ்மரம் என்று ஓர் மரம் இப்பொழுது ஓர்வித நாரிலிருந்து உண்டாக்கப்படுகிறது. அது ஸாதாரண மரத்தை

விடச் சற்று பலக்குறைவாக இருப்பினும், இழைத்தால் அதில் மிகுந்த தளதளப்பு உண்டாகின்றது. தேக்கைப்போல எளிதில் அதில் அருமையான வேலைகள் செய்யலாம். ஆணி அடித்தால், அதில் நன்றாகப் பிடிக்கின்றன. இதில் நெருப்புப் பற்றுவதில்லை.

* * *

5. புதக்கிரகமும் அதன் உஷ்ணமும்:—புதக்கிரகமானது சூரியனைச் சுற்றிவரும் கிரஹங்களுள் அதன் அருகாமையில் உள்ளது. அது சுற்றிவரும்பொழுது, எப்பொழுதும் சூரியனிடமிருந்து ஒரே தூரத்தில் இருப்பதில்லை. ஒரு ஸமயத்தில் சூரியனிடமிருந்து அது அதிதூரத்திலும், மற்றைய ஸமையத்தில் அதி அருகாமையிலும் காணப்படுகிறது. இவ்விரண்டு தூரங்களுக்கும் சற்றேறக் குறைய 15,000,000 மைல் வித்தியாஸம் உண்டு. இது ஸூர்யனை 88 நாளைக்கு ஒருதரம் சுற்றிவருகிறது. நமது பூமியின் நிலை எவ்வாறிருக்கின்றது என்று பார்ப்போம். நமது பூமி ஸூர்யனிடமிருந்து சற்றேறக் குறைய புதனைப்போல் 2½ மடங்கு தூரத்திலிருக்கிறது நமது பூமி நடுக்கோடைகாலத்தில் ஸூர்யனிடமிருந்து அதிதூரத்திலும், நடு மழைகாலத்தில் அதிஅருகாமையிலும் இருக்கின்றது. இவ்விரண்டு தூரங்களுக்கும் ஏறக்குறைய 3,000000 மைல் வித்தியாஸம். இதனால் நமக்குத்தோன்றும் உஷ்ணத்தையும் புதக்கிரஹத்தில் உள்ள உஷ்ணத்தையும் ஒப்பிட்டு நோக்கில், அது ஸூர்யனிடமிருந்து அதிக தூரத்தில் இருக்கும் பொழுது நமக்கு இருக்கும் உஷ்ணத்தைப்போல 5-மடங்கு உஷ்ணத்தையும், அதிக அருகாமையில் இருக்குங்கால் 11-மடங்குஉஷ்ணத்தையும் உடையதாக இருக்கிறது. இந்த உஷ்ணத்தால், தண்ணீர் காய்ந்த தோசை கல்லில் விட்டாற்போல உடனே ஆவியாகிவிடும். ஆகையால் வான சாஸ்திரிகள் புதக்கிரகத்தில் ஸமுத்திரம் நதி முதலியன இல்லை என்று உணர்ந்துஅதில் நம்மைப்போன்ற ஜனங்கள் இல்லை என்று ஸ்தாபிக்கின்றனர்.

6. இதுவரையில் நாம் வைரம் ஒன்றுதான் மிகக் கடினமான வஸ்து என்றும், அது கண்ணாடி முதலிய கடின பதார்த்தங்களை எளிதில் அறக்கும் சக்தி உடையது என்றும் எண்ணியிருந்தோம். இப்பொழுது, மாய்ஸன் என்ற பிரகிருதி சாஸ்திரி வைரத்தைப் போன்ற கடினமான இரண்டு வஸ்துக்களைக் கண்டுபிடித்திருக்கிறார்.

7, மின்சார சக்தி:-ஆகாயத்தில் மழைகாலங்களில் இந்தசக்தி ஏராளமாக இருக்கின்றது என்று, பிராங்களின், தாம் விட்ட காற்றாடியால் நிரூபணம் செய்திருக்கிறார். இக்காலத்தில் தூரஸம்பாஷணை யந்திர ஆபீஸ்களில் வேலையாக இருக்கும் வேலையாட்கள் சிலர் விட்ட காற்றாடிகளால் ஸாதாரண காலங்களிலும் இந்த மின்சார சக்தி ஆகாயத்தில் ஏராளமாக இருக்கின்றதென்றும், அதைக் கம்பிகள் மூலமாகக் கீழே இறக்கி சிறு டிராம் வண்டிகள் ஓட்டுதல் முதலிய காரியங்களையும் செய்யலாம் என்றும் காட்டி இருக்கிறார்கள். இவ்வாறு காற்றாடி விடுவதால், ஆகாயத்தில் இருந்து மின்சார சக்தியை கீழே இறக்கி உபயோகப்படுத்துவது எளிதாகி விட்டால் அதை உண்டாக்குவதற்கு நாம் யந்திர விஷயங்களில் வீணாகச் செலவிடும் செலவை நிறுத்தி விடலாம். மின்சார சக்தி தண்ணீரை விட மலிவாகிவிடும். இனிமேல் காற்றாடி விடுவதற்கு வேண்டிய காற்று இல்லாத காலத்தும் அதைவிடக்கூடாத அதிகக்காற்றக் காலங்களிலும் உபயோகப்படுத்தும் பொருட்டு நல்ல ஸமயங்களில் இருக்கும் மின்சாரசக்தியை சேர்த்துவைக்க ஒரு யந்திரம் மாத்திரம் கண்டு பிடித்துவிட்டால் மிகவும் நலமாக இருக்கும்.

* * *

8. மின்சாரசக்தியின் சிறப்பு:-இக்காலத்தில் இந்த சக்தியை எல்லோரும் சிறந்தது என்று எண்ணுவானேன்? கைத்தொழில் முதலிய எல்லா விஷயங்களுக்கும் இந்த சக்தி அதிக உபயோகமாக இருக்கின்றது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். இதுவுமல்லாமல் பிரகிருதி சாஸ்திர விஷயங்களில் இதன் உபயோகம் அளவிடமுடியாதிருக்கின்றது. மேலும் வர வர எல்லோரும் நமது உயிரும் மின்சாரசக்தியும் ஒரே தன்மையை உடையது என்று அறிந்து கொண்டிருப்பதே இதன் சிறப்பிற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். இதனால் இக்காலத்தில் வைத்தியர்கள் இதை வியாதியை ஸ்வஸ்தம் செய்வதில் ஸாதாரணமாக உபயோகப்படுத்தத் தொடங்கி விட்டார்கள். இதுவரையில் ஸ்வஸ்தமாகாத அஸாத்யவியாதிகளும் எளிதில் இனி மேல் ஸ்வஸ்தமாகி விடலாம்.

புத்தக வரவு
BOOKS RECEIVED

(1) வியவஸாய போதினி—இப்புத்தகம் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு மிஸ்டர் எ. சேதுரு மய்யரவர்களால் எழுதப் பெற்றது—இதை பதிப்பித்தவர், சென்னை, எஸ்பிளனேட், மெஸ்ஸர்ஸ் ஜி.எ. நடேசன் அண்டு கம்பெனியார். விலை: போர்டு பதிப்பு 1-4-0: காலிகோ பைண்டு ரூ. 2 0 0

(2) மானிட மர்ம சாஸ்திரம்—இப்புத்தகம் மிஸ்டர் எஸ். சாமிவேல், பி.எ. அவர்களால் எழுதப்பெற்றது. 500 பக்கங்களுக்கு மேலுள்ளது. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு மிகவும் நேர்த்தியாய் பயிண்டு செய்திருக்கிறது. விலை ரூ—5—0—0.

3. ரம்யனும் ஜோலிதையும்—இந்நாடகம், ஷேக்ஸ்பீய மஹாகவி இயற்றிய நாடகத்தின் தமிழ் அமைப்பு. மிஸ்டர் எஸ். வி. சீனிவாஸய்யர், பி. எ ஆவர்களால் இயற்றப்பட்டது விலை அணா—8.

4. ஞானம்பாள்:—இப்புத்தகம் ஸ்ரீ கஜாம்பிகையம்மாளால் எழுதப்பட்டது—இதைப் பதிப்பித்தவர், திருவல்லிக்கேணி, லக்ஷ்மி விலாஸம் புத்தகசாலை சொந்தக்காரர் மிஸ்டர் பி. வைத்தினதய்யர் விலை அணா—6.

(இவைகளைப்பற்றி விரிவாய் அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம்.)

ADVERTISEMENTS

1908வருஷத்து 1 வது ஆக்ட்

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தை பற்றிய
சென்னபட்டணம் 1908 வருஷத்து ஆக்ட் (தமிழ்)

சென்னை கார்டியன் அச்சுக்கூட தலைவரால் டெமி, 8-பேஜிசைஸில் திடமானகிளேஸ் காயிதத்தில், தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது.

தமிழ் காப்பி 1க்கு விலை அணா 6.

வி. பி. தபால்சார்ஜு பிரத்தியேகம்

இந்த புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசிய மிருக்கவேண்டியது.

தேவையானவர்கள் அடியில் கண்ட விலாசத்துக்கு உடனே யெழுதிக் கொள்ளவும்.

மெஸர்ஸ் ஜி. ஸி. லோகநாதம் பிரதர்ஸ்,
கார்டியன் அச்சுக்கூடம்,
மவுண்டுரோட், மதராஸ்.

(இப்புத்தகத்திற்கு ஆர்டர்செய்பவர் இப்பத்திரிகையின் பெயரைகுறிப்பிடவும்.)

VERY IMPORTANT
TO SPECIAL TEST CANDIDATES.

1. CATECHETIC COMMENTARIES ON THE INDIAN PENAL CODE with an exposition of the Indian Case Law brought up-to-date by the late Mr. C. G. Kuppuswami Aiyar, B.A., B.L., (District Judge Guntur.) Original Price Rs. 2-8.
Reduced to „ 2-0.

2. GUIDE TO VILLAGE AND TALUK MANUAL by Mr. V. Srinivasachariar, B.A., Deputy Collector, Madura, Price Re. 1.
Reduced to As. 12.

3. EXTRACTS FROM THE CIVIL SERVICE REGULATIONS (prescribed for the Account Text) with copious notes, authoritative and explanatory and question papers and answers, by Mr P. O. Sivaraman B.A., Auditor, Accountant General's Office, Madras.
As. 12.

NOTE :—Books not in our stock supplied at the Publishers' prices within a reasonable time without charging any extra commission for our labour.

THE GENERAL SUPPLIES Co.,
PUBLISHERS AND GENERAL AGENTS,
MYLAPORE, MADRAS.

JUST PUBLISHED
"The Universe and Man"
BY
SWAMI RAMAKRISHNANANDA.

Printed beautifully on Feather Weight Paper

	Rs.	A.	P.
Calico Bound Edition	2	0	0
Board Bound Edition	1	0	0

The General Supplies Co.,
Publishers,
MYLAPORE, MADRAS.

DIABETIN.

Cures Diabetes, Insipidus and Melitus. It removes general debility, burning of the palms and soles, weakness of the brain, thirst, debility due to excessive urination, discharge of sachatine matter with the urine, aching pain in the limbs, drowsiness and œdema of the legs. Price per phial Rs. 3 only.

Mr. N. K. Bose, B. A., Headmaster of Khalisakhali High School, writes:—I tried your Diabetin upon a relative of mine. He had been suffering from Diabetes of the most malignant type for the last 4 or 5 years and tried all sorts of medicines but to no effect, until at last a phial of yours worked wonderfully.

Mr. N. N. Mukerjee, M. B., of Madauha, writes:—Diabetin has been prescribed to several of my patients. All of them have got cured.

R. P. Sathe, Esq., Station Master of Sambalpur, writes:—I am feeling better. Kindly send me two phials per V. P. P.

To be had of:—

Dr. B. K. BOSE,

No. 50 Talpokur Road,

CALCUTTA.

"ROYAL BRAND"
RED MARKING INK

உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்புமை.

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒரு தடவை குறிபோட்டு விட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு 1 4 0

வியாபாரிகளுக்கும், ஒரேதடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் ரேட்டு பிரத்தியேகம்,

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி;

மைலாப்பூர்.

மதராஸ்.

சந்திரசேகரன் *

"லோகோபகாரி":—

"இவ்வருமையான புஸ்தகம் வங்காளி பாஷையிலிருந்து மஹேசகுமார சர்மா வென்பவர் எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். கவிகுல சிரேஷ்ட திலகரான பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயரால் சந்திரசேகரனென்னும் கதைப்புஸ்தகம் வங்காளி பாஷையில் எழுதப்பட்டது. அவருடைய கதைக்கு யாதொரு குறையும் உண்டாகாமல் தமிழில் நவரஸங்களோடு மேற்கண்ட புஸ்தகம் வெளிவந்திருப்பது மிகுந்த ஸந்தோஷத்தைத் தருகிறது. தமிழபிமானிகள் ஒவ்வொருவரும் இதை வாங்கி அவசியம் படிக்க வேண்டும், ஸ்திரீ புருஷர்களை நல்வழியில் நடத்த இந்த புஸ்தகம் தர்மதேவதையைப் போல் உபதேசம் செய்கிறது. இதன் பெருமையை எழுதப் புகுந்தால் இடம் போதாதென்றே சொல்ல வேண்டும். சைவலினி, பிரதாபன், சந்திரசேகரன் டலினி பீபி, ஸுந்தரி இன்னுமுள்ள ஸ்திரீ புருஷர்கள் செய்த ஸாஹஸ தைர்ய, பராக்கிரம் குணவிசேஷங்களெல்லாம் அதிசயிக்கத்தக்கவை. தெய்வபக்தி, குருபக்தி, பதி பக்தி, மித்ரவாத்ஸல்யம், புருஷதர்மம் ராஜ நீதி, சாந்தம், தத்வார்த்தங்களெல்லாம் நீ முன், நா முன் என்று ஜயக்கொடி நாட்டுகின்றன. பிரஸித்த புருஷரான பங்கிம் சந்திர சாட்டர்ஜியினுடைய ஒரு கிரந்தத்தை மனம் வைத்துப் படித்தால் மட்டிலும் மதியை யடைவானென்றால் மற்றவர்களின் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ, கதாப்பிரியர்களும், ஸன்மார்க்கர்களும் வித்யாவதிகளும், இப்புஸ்தகத்தை ஆதரிக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கை, தமிழில் இவ்வித கிரந்தம் கிடைப்பது அருமை. அந்த குறையைத் தீர்க்க நமது ஆரிய ஸஹோதரர்கள் முன் வந்திருப்பதைப் பார்த்து ஆநந்த மடைகிறோம். மேன் மேலும் இவ்வித கிரந்தங்களைத் தமிழில் வெளிப்படுத்தும்படி வாசகர்கள் புரோத்ஸாகம் செய்வார்களாக."

* இப்புத்தகம் சென்னை, மைலாப்பூர், ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரிடம் கிடைக்கும். இதன் விலை அணா 8.

WORLD-KNOWN

DEPILATORY.

ROYAL WONDER SOAPS

Remove superfluous hair at once, give no pain to the skin. Price Re. 1 per box of three. Rs. 4-2-0 per dozen soaps. Postage extra.

The Royal Agency.

P. O. Nadiad, Bombay.